# மணிமேகலை வெண்பா

## பொன்னிவிழாப் பறை முழக்கம்

பொன்னி விழாநாளும் போந்த தெனவேந்தன்
உன்னி விழாச்செய்தி ஊரெல்லாம்—பன்னிப்
பறையானை அன்றேறு பறையறையச் சொன்னான்
இறையானை சென்ற தினிது.

## நகரை உள்ளும் புறமும் புதுக்குக

அரசறைந்தான் அவ்வாறே ஆங்காங்கு நாட்டில்
முரசறைந்தான் "முந்து புகழ்சேர்—பெருமக்கள்
உள்ளும் புறமும் புதுக்கநகர்! நெஞ்சத்தை
அள்ளும்கா வேரிவிழா அன்று."

## நகரின் அழகமைப்பு

இதுமணலோ செம்பொற் பொடிதானோ என்னப்
புதுமணல் ஓவம் புரிந்த—முதுநகரில்
பட்டுக் கொடியும் பறக்கும்நறுந் தொங்கலிலே
மட்டுக் கொடியும்மலர்க் காம்பு.

## தோரணமும் விளக்கும்

சிலந்திளங்கும் என்னத் தெருந்தோறும் மேற்பால்
கலந்தியங்கும் தோரணங்கள் காற்றால்—புலந்தியங்கப்
பண்ணும்முன் வீடெல்லாம்! பாழிரவில் நற்பகலைப்
பண்ணுமே பாவை விளக்கு.

## தெருப் பச்சைப் பந்தல்கள்

முன்றில் ஒவ் வொன்றுமே பன்மணியால் மூடுற்றே
ஒன்றில்ஒவ் வொன்றும் ஒளிமிகுக்கும்—நன்றே
இருப்பச்சை இல்லாப் பெருந்தேராய்த் தோன்றும்
தெருப்பச்சைப் பந்தல்கள் சேர்ந்து.

## தெரு விருபாலும் பூச்செடிகள்

சாடிப் பலவண்ணப் பூச்செடிகள் பன்மணியைச்
சாடித் தளிர்த்துத் தெருவெல்லாம்—நாடியே
பண்டழைக்க வண்டினத்தைப் பாடுங்கள் என்றுதேன்
கொண்டழைத்துக் கொண்டிருக்கும் அங்கு.

## ஆடல் பாடல்

தெருமுடிவில் ஆடலும் பாடலும் கொள்வார்
திருமுடிவில் வேந்தன் திறவே—ஒருமுடிவில்
சீர்வாழ்த்தி மன்றப் புலவரெல்லாம் செந்தமிழின்
பேர்வாழ்த்த நிற்பார் பெரிது.

## குழந்தைகள் தமிழ் பாடல்

மைச்சிட்டுப் பாடும் மருங்கில் அதன்ஒலியை
அச்சிட்டுக காற்சிலம்பு பாடவே—தச்சிட்ட
பாவை அசைந்தாடும் பாங்கில் குழந்தைதமிழ்
நாவை அசைந்தாடும் நன்கு.

## தமிழ் மலரும் மன்றங்கள்

அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறம்பொருள் இன்னவெனத் தேர—உறங்கும்
சிலரும் விழிக்கத் தமிழின் சிறப்பு
மலரும் புலவர்தம் மன்று.

## காவேரி சென்று ஆடினார்கள்

காற்றினிலே ஆடை பறக்கப்போய்க் காவேரி
ஆற்றி னிலாமுகத்தார் ஆடுவார்—நேற்றிரா
உண்டஇதழ் கொம்புத்தேன் காதலர்கள் அந்நேரம்
கண்டஇதழ் மாணிக்கக் காடு.

## மக்கள் நெருக்கம்

நீராடி மீளும் நெடுந்தேர் பரிதாண்டி
நேராடப் போவார் நெருக்கடைவார்—ஆரிழையார்
பின்னடக்க மாச்செல்வர் பீடுமலர்க் கைப்பற்றி
முன்னடக்க மாச்செல்வர் மொய்த்து.

## அரசுக்கு வாழ்த்து

வாழிய சோழமன்மா வண்கிள்ளி செங்கோலே
வாழிய சோழன் வரிப்புலிநீ—டூழி
எனப்பாவை யார்வத்தால் பாடினார் கூத்த
ரினப்பாவை யார் ஆடினார்.

### அரசவையில் அவள் ஏன் இல்லை?

போதவிழும் கூந்தலார் போந்தாடும் போதெல்லாம்
மாதவியும் மேகலையும் வாராரோ—ஏதவர்க்கு
நேர்ந்ததென் றார் சில்லோர் நேர்மைஇது வோஎன்றார்
சேர்ந்தததிது தாயின் செவி.

### மாதவியின் தாய், 'மாதவியையும் மணிமேகலையையும் அழைத்துவா' என்று பாங்கிக்குக் கூறினாள்

பிழைஎன்றாள் மாதவிதாய் பெண்பேர்த்தி மாரை
அழைஎன்றாள் மன்றத்தில் ஆட—உழையிருந்த
பாங்கி நடந்தாள் அப் பச்சைமயில் அச்சவிடை
ஏங்கிற்றே என்ன எழுந்து.

### மாதவியிடம் பாங்கி உரைத்தாள்

ஆங்கிருந்த மாதவியை அன்பால் அணுகியே
'நீங்கா உமதுகடன் நீங்கிற்றோ—ஊங்காட
ஏன்மறந்தீர் ஏற்ற கலைவல்லீர்? மாமதிதான்
வான்மறக்கு மோ?' என்றாள் மாது.

### மாதவி பாங்கியிடம் கூறுகின்றாள்

காவலனைக் காற்சிலம்பால் வென்று கொலையுண்ட
கோவலன் கொண்டகுடிப் பேர்காத்த—பாவை
தரத்தைஆய் வாளாதன் தாமரைபோற் கண்ணாள்
பரத்தைஆய் வாழ்வாளா பார்.

### மணிமேகலை அவைக்கு வரமாட்டாள் என்கின்றாள் மாதவி

இன்பமெனல் நற்றவத்தால் எய்துவாம் மற்றுள்ள
துன்பமெனல் இவ்வுலகில் தோய்துவாம்—என்பதவள்
என்னம்மணி மேகலைதான் ஏகாள் அவை; இஃது
திண்ணம்எனச் செப்பினாள் தாய்

### அறவண அடிகளிடம் மாதவி சொன்னாளாம்

அல்லலுற்றேன் காதலனின் கண்ணகியின் அல்லலெல்லாம்
சொல்லலுற்றேன் வந்திங்கே; தூய்நெறியே-சொல்லலுற்ற
அண்ணல் அடிகள் அரவணர்பால்! நான் அதன்மேல்
நண்ணல் நவின்றார் அவர்.

### அறவணர் சொல்லியது

எப்பொருட்கும் ஆட்படுதல் இன்றி இடரற்ற
மெய்ப்பொருள் ஆதல் விடுதலை—அப்பொருளின்
பற்றுக்குப் பற்றிவிட வேண்டுமென் றார் மற்றஎலாம்
எற்றுக்கென் றாள்மா தவி!

### மாதவி ஆயத்தார்க்கும் அன்னைக்கும் சேதி அறிவித்தாள்

அம்மைக்கே ஆயத்தி னோர்க்கே அறிவி என்று
செம்மைக்கே ஆயத்தி செப்பினாள்—கைம்மேல்
இருந்த மணியே இழந்தவள்போல் நெஞ்சம்
வருந்த நடந்தாள் அம் மாது.

### ஆங்கு ஒரு புறம் பூத்தொடுக்கும் மணிமேகலை நிலை

கோவலனின் மாதவியின் அன்பின் தொடை! அழகை
மேவலரும் போற்றுமணி மேகலைதான்—ஆவ லுடன்
பாத்தொடுத்துக் கொண்டிருப்பார் போலுமொரு பாலிருந்து
பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள் ஆங்கு.

### மணிமேகலை பூத்தொடுக்கும் திறம்

பன்மலர்க்காம் பொவ்வொன்றும் பச்சைமயில் மேகலைதான்
மென்மலர்க்கைக் காந்தள் விரல்பற்றித்—தன்மலர்க்கண்
கூறுமுறை கோணாமல் கட்டுந்தார் வண்ணத்தை
நூறுமுறை நோக்கல் தகும்,

### மாதவி பாங்கியிடம் கூறிய வரலாறு மணிமேகலையை வருத்தியது

ஆங்கிருந்த மாதவிதன் ஆளன்மனை யாளிடரைப்
பாங்கிருந்த பாங்கிக்குக் கூறியதைக்—கோங்கிருந்த
வண்டார் குழலி மணிமே கலைசெவியால்
மொண்டாள் முறிந்தாள் தன் நெஞ்சு.

### மணிமேகலை கட்டிய மாலை கண்ணீரில் மிதந்தது

காவலன்தன் காவல் பிழைத்ததுவும் கண்ணகியும்
கோவலனும் மாண்டதுவும் கூறியதைப்—பாவை
நினைப்பாள் நிலைதளர்வாள் கண்ணீரை ஊற்றி
நனைப்பாள் நறுமலர்த்தா ரை.

### மாதவி அறிந்தாள்

கரும்பிருக்கும் சொல்லும் கனியுதட்டின் ஓரம்
அரும்பிருக்கும் அஞ்சிரிப்பும் எங்கே?—திரும்பித்தாய்
பெண்கண்டாள் பெண்தொடுக்கும் மாலைமிதக் கக்கண்டாள்
கண்கண்டாள் கண்ணீர்கண் டாள்.

### வேறு மலர் வேண்டினாள் தாய்

ஆறொன்று கண்ணீர் அலங்கலைத்தீ தாக்கியதால்
வேறொன்று காணமலர் வேண்டென்று—வீறொன்று
நெஞ்சினாள் மாதவிதான் நேர்ந்த துயர்மாற்றக்
கெஞ்சினாள் கேட்டாள் கிளி.

### மணிமேகலை வெளியிற் செல்லுவதைப் பாங்கி எதிர்த்தாள்

ஈதுரைக்கக் கேட்ட எழிற்பாங்கி அன்னையீர்
ஏதுரைக்க லானீர் இதோஇந்த—மாதுரைக்கின்
மையேந்து கண்ணாய் மயல்தீர்க்க வேண்டுமென்று
கையேந்தும் கண்டால் உலகு.

### மேலும் பாங்கி கூறுகின்றாள்

போது பறிக்களங்கும் போகவிடா தீர்அழகு
மாது பறிக்க எங்கும் மாநிலத்தின்—மீது
விழிதிறந்து வாழ்கின்றார் வேந்தர் அழிவுக்கு
வழிதிறந்து வாழ்வோமோ நாம்.

### உதய குமரனால் கேடு வரக்கூடும்

எவ்வனமே சென்றாலும் ஏந்தலின் தோன்றலுக்குச்
செவ்வனமே செப்பப் பலருள்ளார்—இவ்வனம்
மல்லல் உவவனம்! மங்கையுடன் நானுமே
செல்லவெளிற் செல்வேன்என் றாள்.

### தாய் ஒப்புக்கொண்டதால் இருவரும் எழுந்தார்கள்

தன்னில் எழுந்த தமிழ்ப்பாட்டும் சொல்மாற்றிப்
பின்னி எழுந்த பிழைப்பாட்டும்—என்ன
ஒருமணி மேகலையும் பாங்கியும் ஆன
இருமணியும் சென்றார் எழுந்து.

### மணிமேகலையும் சுதமதியும் காட்சிக்கு மகிழ்வார் மனம் கவிழார்

கூட்டுக்கிளிகள் இருக்கை குறையாக்கிக்
காட்டு மயிலாகிக் கால்வைத்த—பாட்டையெலாம்
ஒவ்வொன்றும் காண்பார் வியப்பார் உருகுவார்
எவ்வொன்றும் ஈடுபடார்.

### ஒரு களி உண்ணா நோன்பியைக் கட்குடிக்க அழைக்கின்றான்

பண்ணாத நல்ல சுவை நீர் பருகிடலாம்
உண்ணாத நோன்பிகளும் உண்ணிலொன்றும் —பண்ணாதென்
றுள்ளுக் கழைத்தான் ஒருகளி! நோன்பிகண்டான்
கள்ளுக் கடை என்ற பேர்.

### பெருங்களி இயல்பு

மறுகு படுபிணத்தின் காதில் மகிணன்
அறுகு செலுத்த அவனைக்—குருகினான்
கட்டி குடித்தேன் ஓய்வெடுத்தேன் என்றான்ஏன் ஓய்வென்னக்
கட்குடிக்கத் தான் என்றான் காய்ந்து.

### வையம் துன்பம் நிறைந்தது

வைய நடைமுறையில் துன்பமே வாய்ப்பதன்றி
உய்யுமா றில்லை என உரைத்துத்—துய்ய
மணிமேகலை அம் மறுகு நடந்தாள்
அணிமேவும் அப்பாங்கி யோடு.

### எங்கும் குறைபாடு

பொன்னைக் குவித்துவைத்தோன் பொங்கலுண்ண [வாழையிலைத்
தொன்னை திருடுகையில் தோதுதுண்டு—பின்ஒருவன்
மேலாடை மேற்சென் றிழுப்பான் அவன் செருப்பைக்
காலாடி னான் ஒருவன் கண்டு.

### பற்று நீங்க வேண்டும்

இறைபாடென் பட்டாலும் இன்மைபோ னாலும்
குறைபா டிலாமலிரா தென்று—மறைபாடும்!
முற்று விடுதலை வேண்டின் மனமே
பற்று விடுதலை வேண்டு.

### உவவனம் சேர்ந்தனர் மணிமேகலையும் சுதமதியும்

என்றிளையாளேதன் பாங்கியுடன் இங்குமங்கும்
நின்றிளை யாததொரு நெஞ்சமுடன்—சென்றவளாய்க்
காணா உவவனம் பாங்கி தான் சுாட்டிடவே
பூணா வியப்புப்பூண் பாள்,

### மணிமேகலை வந்தபோது அவளைக் கண்டவர்கள் என்ன ஆனார்கள்

மாது மலர்வனத்தைக் காண்பாள்! வழிநடந்த
போது பலர் கண்டு பூண்ட இறும்—பூது
புகல விரும்பினேன் பொன்றாத் தமிழ்விட்
டகல விரும்புவார் ஆர்?

### கட்குடத்தின் உள்ளிருந்த கள்ளிலும் மணிமேகலை உருவம்

கட்கடைக்கே ஆளானார் கார்குழலைக் கண்டு கருங்
கட்கடைக்கே ஆளாகக் காத்திருந்தார்—கட்குடத்தை
எண்ணார்கள் எண்ணுகையில் கட்குடத்துள் கண்ணுக்குக்
கண்ணாளைக் கண்டார் கவிழ்ந்து.

### மணிமேகலை துண்டு உடுத்துப் போகும்படி செய்தவர் யார்?

பண்டுடுத்தும் பட்டில்லை பல்லிழைகள் இல்லை இவள்
துண்டுடுத்துப் போகின்றாள் தொல்லுலகு—கண்டெடுத்த
தங்கப் படிவம் தவத்துக் குடன்பட்டாள்
இங்கிப் படிச்செய்தார் யார்?

### மணிமேகலை கண்டாலே தித்திக்கும் தேன்

குன்றத்துக் கொம்புத்தேன் முல்லைவா ழைப் பழத்தேன்
மன்றத்து மாப்புலவர் செந்தமிழ்த்தேன்—என்ற முத்தேன்
உண்டாலே தேன்! இம் மணிமே கலை ஒருத்தி
கண்டாலே தித்திக்கும் தேன்.

### வையவிளக்கை யாருக்குமில்லாமல் ஆக்கினரே

தையலை இவ்வாறு தவக்குழியில் தள்ளுவதோ?
வைய விளக்கை மருக்கெழுந்தை—ஐயையோ
ஆருக்கு மில்லாமல் ஆக்கினரே பெண்ணழகின்
வேருக்கு வெந்நீரை விட்டு.

### யாழெடுத்தவன் மணிமேகலையைக் கண்டு, யாழின் மேலேயே சாய்ந்து கிடந்தான்

என்று பலரும் இயம்பி வருந்தினார்
சென்று பரத்தை தெருவுறைச்சுள் — ஒன்றை
நினைத்துயாழ் தொட்டஎட்டி நேரிழையைக்கண்டே
அனைத்து மறந்திருந்தான் ஆங்கு.

### உதயகுமரன் மணிமேகலை பற்றிக் கேள்விப்படுகிறான்

அந்நேரம் தேரேறி அங்குவந்த வேந்தன்மகன்
இந்நேரம் யாரால் நீ இன்னலுற்றாய் – முன்னே
அதையுரைப்பாய் என்றுரைத்தான்: அன்னம் நடந்த
கதையுரைப்பான் எட்டி கடிது.

### எட்டியின் இரக்கம்

சின்னஞ் சிறிய இடைச் செல்விமணி மேகலையாம்
அன்னம் அழகு சுமந்தகன்றாள் — முன்னமெல்லாம்
பட்டுடுத்தும் பான்மையினாள் இன்று தவநெறிக்குட்
பட்டுடுத்தும் பான்மையினாள் ஆய்,

### மணிமேகலையைப் பார்த்தேன்; கோவலன் வரலாறு நினைவுக்கு வந்ததும் யாழிற் சாய்ந்தேன்

அன்னாளைக் கண்டேன் அவள் தந்தை கோவலனின்
முன்னாளை எண்ண முறித்ததுள்ளம் — என்யாழில்
இட்டவிரல் தீநரம்பில் இட்ட தாம் என்றெட்டி
பட்டதுயர் சொன்னான் பதைத்து.

### மணிமேகலையை என் தேரில் ஏற்றி வந்துவிடுவேன்

அப்படியா அன்னாளைச் சென்று மணித்தேரில்
எப்படியும் ஏற்றிவந்தென் இற்சேர்ப்பேன் — அப்பொன்னை
நீணாள் நினைந்தும் நெருங்காத என்வாணாள்
வீணாள்என் றானிளைய வேந்து.

### உதயனின் கண்ணுக்கு வழியெல்லாம் மணிமேகலை

குளிர்காற்றுக் கூந்தல் அருவியோ! தேமாந்
தளிர்மாது மேனியோ! தண்டை — ஒளிர்வண்டோ?
என்பான் எதிலும் மணமே கலைகாண்பான்!
தென்பா னடத்தினான் தேர்.

### யாழெடுத்தவன் மணிமேகலையைக் கண்டு, யாழின் மேலேயே சாய்ந்து கிடந்தான்

என்று பலரும் இயம்பி வருந்தினார்
சென்று பரத்தை தெருவுறைச்சுள்—ஒன்றை
நினைத்துயாழ் தொட்டஎட்டி நேரிழையைக்கண்டே
அனைத்து மறந்திருந்தான் ஆங்கு.

### உதயகுமரன் மணிமேகலை பற்றிக் கேள்விப்படுகிறான்

அந்நேரம் தேரேறி அங்குவந்த வேந்தன்மகன்
இந்நேரம் யாரால் நீ இன்னலுற்றாய்– முன்னே
அதையுரைப்பாய் என்றுரைத்தான்: அன்னம் நடந்த
கதையுரைப்பான் எட்டி கடிது.

### எட்டியின் இரக்கம்

சின்னஞ் சிறிய இடைச் செல்விமணி மேகலையாம்
அன்னம் அழகு சுமந்தகன்றாள்—முன்னமெல்லாம்
பட்டுடுத்தும் பான்மையினாள் இன்று தவநெறிக்குட்
பட்டுடுத்தும் பான்மையினாள் ஆய்,

### மணிமேகலையைப் பார்த்தேன்; கோவலன் வரலாறு நினைவுக்கு வந்ததும் யாழிற் சாய்ந்தேன்

அன்னாளைக் கண்டேன் அவள் தந்தை கோவலனின்
முன்னாளை எண்ண முறித்ததுள்ளம்—என்யாழில்
இட்டவிரல் தீநரம்பில் இட்ட தாம் என்றெட்டி
பட்டதுயர் சொன்னான் பதைத்து.

### மணிமேகலையை என் தேரில் ஏற்றி வந்துவிடுவேன்

அப்படியா அன்னாளைச் சென்று மணித்தேரில்
எப்படியும் ஏற்றிவந்தென் இற்சேர்ப்பேன்—அப்பொன்னை
நீணாள் நினைந்தும் நெருங்காத என்வாணாள்
வீணாள்என் றானிளைய வேந்து.

### உதயனின் கண்ணுக்கு வழியெல்லாம் மணிமேகலை

குளிர்காற்றுக் கூந்தல் அருவியோ! தேமாந்
தளிர்மாது மேனியோ! தண்டை—ஒளிர்வண்டோ?
என்பான் எதிலும் மணமே கலைகாண்பான்!
தென்பா னடத்தினான் தேர்.

### மணிமேகலையும் பாங்கியும் இன்னும் உவவனக் காட்சியைக் கண்டு மகிழ்கின்றார்கள்

ஏடகத்துக் காட்டாத இன்பத்தை நல்லியற்கை
நாடகத்தை நங்கையும் பாங்கியும்—தேடிஎப்
பாலும்கண்டார்கள்! பகர்ந்து பகர்ந்துமேன்
மேலும்கண்டார்கள் விழைந்து!

### மயில் தோகையில் மறைந்தது ஒரு மான்

களித்தாடும் மஞ்ஞைக் கவின்தோகை யின்பின்
ஒளித்தாடும் மானை ஒருமான்—விளித்தோடி
மாவடிக்குப் பின்னிருந்த மந்தியின் செவ்வலரிப்
பூவடிக்குப் புண்ணாகும் நெஞ்சு.

### மாலை புனைந்து குளத்துக் கண்ணாடி பார்க்கும் ஒரு குரங்கு

விண்ணாடி மாம்பூ விரித்தார் புனைகடுவன்
கண்ணாடி காணும் ஒருகுளத்தின்—உண்ணாடி
மாம்பழத்தைப் போடப்போம் மந்தியினை நீள்வரால்
ஆம்! பழத்தைப் போடென்னும் அங்கு!

### தவளை விளைத்த குழப்பம்

குவளை விழுந்த குளத்தில், எழுந்து
தவளகி தளபுளா என்ன—உவளுகின்ற
கெண்டை நடுங்கும்; கிளிகுயில் வண்டெல்லாம்
தொண்டை நடுங்கும் தொடர்ந்து.

### அல்லியை வெறுக்கும் பலாவைப் பாடும் வண்டு

மூடிய அல்லிக்கு மொய்க்காமல் தாமரைக்குப்
பாடியவண்டு பலாமரத்தை—நாடியதன்
பேருக்கும் தன்பெரிய பிள்ளைக்கும் முள்ளுக்கும்
வேருக்கும் பாடல் வியப்பு;

### முத்துக்கு முல்லைச் சிரிப்பு நிகர்!

என்றுக்கு வெண்முருக்கம் பூநிகர்! ஏழிசை
மன்றுக்கு வண்டுநிகர்! வானிமிர்ந்த—கொன்றைப்பூங்
கொத்துக்குப் பொற்காசின் கோவைநிகர்! முற்றுநிகர்
முத்துக்கு முல்லைச் சிரிப்பு!

### நெடுந் தொலைவிலிருந்து ஓர் ஒலி!

அண்டுமலர்ச் சோலை அழகு வரிசையெல்லாம்
கண்டுவரும் போதுதன் காதினிலே—நண்டு

நிகர் அங்கை சேர்த்து நெடுந்தொலை ஆய்ந்து
பகர்வாள் தன் பாங்கியைப் பார்த்து

### உதைய குமாரன் தேரொலி

ஓரொலி கேளாய் உதைய குமரனவன்
தேரொலி போலும்! தெரிவைஎன் —பேரில்
விருப்புடையான் என்பர் விளைவறியேன்; நெஞ்சில்
நெருப்புடையேன் என்றாள் நிலவு.

### மணிமேகலையே பளிங்கு மாளிகையின் உள்ளே போய்விடு

கேட்பது தேரின் மணி ஓசைதான் கேள்உன்னை
மீட்பது தேரின் மணிமேகலையே—வாட்போர்
உதையன்பால் தோன்றாதே மாளிகையின் உட்போ
இதையன்பால் ஏற்கஎன் றாள்.

### பறந்தோடினாள் பச்சை மயில்

மறந்திட்டாள் பச்சை மயிலனையாள் ஓடித்
திறந்த பளிக்கறை சேர்ந்தாள்—சிறந்த
உதையன் மணித்தேரும் உற்றது பாங்கி
அதையும்கண் டாள் உரைப்பாள் அங்கு.

### அவன் மட்டச்சரக்கை என்னிடம் விற்கட்டும்

பளிக்கறையில் சென்றாயா? தாழிடுவாய்! பச்சைக்
கிளிக்கறைவ தைப்போல் கிளத்தேன்—வெளிப்புறத்தில்
ஐந்துவிற்க டைத்தொலைவில் நானிற்பேன் ஆள்என்பால்
வந்துவிற்க மட்டச் சரக்கு.

### உதையகுமாரன் வந்து, 'நோய்க்கு மருந்து வாங்கிவா' என்கின்றான்

நிறுத்தைய என்னத், தே ரோட்டி நிறுத்தச்
சிறுத்தை குதித்துச் செவியை—உறுத்தவே
பாங்கிலா மேகலையுன் பாங்குள்ளாள் என்நோய்க்கு
வாங்கிவா என்றாள் மருந்து.

### உனக்கு அறிவுறுத்த என்னால் முடியுமா?

நரைமுடித்து நல்லிளமை நாணி நடுவின்
உரைமுடித்தோற் குற்ற மருக!—விரைவில்
அரசுக் கியலும் அறிவும் தரப்பெண்
முரசுக்கிய லுமா முன்?

## காமம் ஒரு தீ

ஆயினும் ஒன்றுகேள் ஆடவர்க் குக்காம
நோயினும் மாப்பெருநோய் இல்லை—தீயினும்
தீயது தீண்டாத போதினும் தீய்த்தலால்!
நீயது நன்று நினை

## பெண்ணழகு நிலையற்றது

தோலழ கென்ப திளமை தொலையின் இல்லை
மேலழ காடை அணியலாம்—ஞாலத்
திதுகொண்டு மேலோர் இடர்கொள்ளார் என்றால்
எதுகொண்டிங் கெய்தினை நீ

## உள்ளே உலவும் மணிமேகலையை உதையன் கண்டு விட்டான்

என்றிளங் கோவுக்கு மங்கை இது சொல்லுகையில்
நின்றிளங் கால்நோவு நீளாமல்—பின்துறையை
நீங்கு பவளப் பளிக்கறைக்குள் நின்றாள்ஓர்
பாங்கு பவளக் கொடி

## உள்ளே புக வாயில் தெரியவில்லை

வெளிக்கறி விக்கும் அகத்தையெலாம் அந்தப்
பளிக்கறையுற் பாவையைப் பார்த்தான்—கிளிக்கறையா?
தூயில் தனைஅடைவாய் தூயோயென் றோடினான்
வாயில் தனையறியான் மற்று.

## மணிமேகலையா? ஓவியமா?

நற்பளிங்கின் உள்ளே நான் நண்ணல் அரிதேயோ!
நிற்பளிங்கு மாரிழையோ! ஓவியமோ—பொற்கொடியே
எத்திறத்தள் மேகலைதான் என்றான் சுதயதியாள்
அத்திறத்தைக் கூறுவாள் ஆங்கு.

## மணிமேகலை மனத்தை மாற்ற நீ யார்?

நோற்றல் உடையாள்; நுவல்காமம் நண்ணாத
ஆற்றல் உடையாள்; அவளுள்ளம்—மாற்றவே
நீயார் என் றாள்பாங்கி; நின்ற உதையனும்
நீயார் என் றான்கொதித்து நின்று.

## சுதமதி வரலாறு

மாருத வேகன் மடக்கி எனைமணந்தான்
தேருதல் செய்யவே என் தந்தை—ஊரெலாம்
தேடினான் காவிரி தென்கடல் சேரிடத்து
நாடினான் நான்கண்டேன் அங்கு.

## மேலும் கூறுதல்

சங்க தருமனால் புத்தன் சமயத்துச்
சங்கம் அடைந்தேன்! தருமங்கள்—தங்குமொரு!
நாவே, பிறிது நவிலலும் இல்லைஇளங்
கோவேவாழ் கென்றாள் பூங் கொம்பு.

## மணிமேகலையை நான் அடைவது சின்னது

இன்னது கேட்ட உதையன் எனக்கிது
சின்னது! சென்று சித்திராபதியால்—பொன்னதுவே
மின்னதுவே என்னுமணி மேகலையை நானடைவேன்
என்னதுவே இன்பமென் றான்.

## என் மனம் அவன்மேற் சென்றது பிழை

வாடி உதையன் மறைந்தபின் மற்றந்த
ஆடி அறைதிறந்து பாங்கியை—நாடி
இழந்தையோ நின்றேன் எதிரிபால் நெஞ்சைத்
குழந்தையோ அன்னதென் றாள் கொம்பு.

## என்மனம் அவன்மேற் சென்றது மீண்டது

மின்றிறந்து மூடினாற் போலுமிம் மெல்லியுள்ளம்
சென்றது மீண்ட தெனினுமந்—நன்றிலன்மேல்
போமம் மனந்தான்என் கற்பைப் புரைசெய்தால்
காமம் வலிதோ கழறு

## காமம் ஒருபுறம் உணர்வு ஒருபுறம்

புணர்வு நிலைதேடிப் போனது சாமா
றுணர்வு நிலைபெறுதல் உண்டோ?—கிணறு
பலிகேட்கும் ஓர்பால் பழிதீர் நிலைகூம்
ஒலிகேட்கும் ஓர் பால் செவி,

### மற்றொரு மணிமேகலை நற்றவ முதியோள்

மணிமே கலைஎன்ற ஓர்முதியோள் வையம்
மணிமே கலைஎன்ற மாப்பேர்—அணியும்
பெரும்புகழும் ஆன தவப்பயனும் பெற்றோள்
கரும்புகளின் கண்ணேர்வந் தாள்.

### முதியோளைப் பணிந்தாள் மணிமேகலை

அன்னை அடிபணிந்தார் ஆன அருளேஎம்
முன்னை அடைந்தோம்என் றார்இருவர்—பின்னையே
என்ன துயர்என்றாள் எல்லாம் துறந்தாளும்
அன்னதுயர் பாங்கிசொன்னாள் அங்கு.

### சுதமதி சொன்னாள்

பாவெடுக்கப் பாவலரும் பார்க்குமணி மேகலைதான்
பூவெடுக்க வந்திட்ட போதமுதை—நாவெடுக்கக்
காலெடுத்தான்: வாயிற் கதவறியான்; தேரேறிக்
கோலெடுத்தான் அவ்வினங் கோ.

### சுதமதி தொடர்ந்து சொல்கின்றாள்

காண்பேன் அவள்திறத்தைக் கண்ட மட்டும் என்திறந்தான்
வீண்போதல் இல்லை விளம்புங்கால்—ஆண்சிங்கம்
என்றுந்தித் தேர்ஏறி ஏகும் உதையன்
என்றுந் திருந்தான் என் றாள்.

### உதையகுமரனிடம் அகப்படாமல் சக்கரவாளக் கோட்டம் போய்விடு

பின்னும்அற்றேபின்னுமற்றேபித்தனுளம்! காமந்தான்
இன்னுமற்றே போகவில்லை என்செய்வாய்?—நன்னுதல்
அக்கர வாளன் அகப்படுத்தல் இல்லாமல்
சக்கரவா ளக் கோட்டம் சார்.

### சக்கரவாளக் கோட்டமா?

என்று முதியோள் இயம்பச் சுதமதி
ஒன்றுக்கு வேறொருபேர் ஒன்றுமா?—தொன்றுபிணக்
கோட்டமா சக்கரவா ளக்கோட்டமா இதுவே
நாட்டமா னாள்பாங்கி நன்று.

### சக்கரவாளக் கோட்டத்தின் கதை

சுடுகாட்டுக் கோட்டத்தை வேறு பெயரி
னொடுகாட்டல் ஏனோ உரைத்து—விடுகென்று
பாங்கி பகர முதியோள் நெடிதுரைக்க
வாங்கி மகிழ்வாள் மணி.

### கதை நடுவில் தூக்கம்

காவிரிப்பூம் பட்டினமும் காடும் பிறவுமவள்
நாவிரிப்பப் பாங்கி நடுச்செவியேற்—றியாவரிதை
வாங்கிக் கிடப்பார்கள் என்பாள்போல் மண்ணிலுற்றுத்
தூங்கிக் கிடந்தாள் மெய் சோர்ந்து

### உதையன் தொல்லை ஒழிந்தது

துணிபல்ல வம்மான் துயர்எய்தல் என்றே
மணிபல்ல வம்சேர்த்தாள்! வாட்டம்—தணித்தாள்.
மணிமே கலைதான்! மணிமேகலையைப்
பிணியானப் பித்தன் இனி.

### நடுத்திட்டில் விட்டு எடுத்தாள் ஓட்டம் முதியோள்

பன்னாள் நடத்தும்படுகடலை நன்னாவாய்
தன்னால் தவிர்த்துமணி மேகலையைத்—தென்பால்
கடலநடுவில் சோர்வுற்ற கண்ணாளை விட்டே
உடனகன்றாள் ஓதுமுதி யோள்.

### சுதமதியிடம் முதியோள்

எங்குற்றாள் மேகலைதான் என்றிருந்தாள் பாங்கிதான்
அங்குற்றாள் மாமுதியோள் அன்புடையாய்—மங்காப்
பழமை மணிபல் லவம் சேர்த்தேன் பார் ஓர்
கிழமையினில் மீள்வாள் கிளி.

### சுதமதிக்கு முதியோள்

மன்னன் மகனுக்கும் வாய்மை பலகூறி
அன்னம் தனையணுகல் ஆகாதென்—றின்னம்
பலவும் பகர்ந்தேன்நற் பாங்கி உனக்குச்
சிலவும் தெரிவிப்பேன் கேள்.

### அம்மாவிடம் இதை அறிவி

ஊறு தவிர்ந்துமணி மேகலைஇவ் வூர்வருங்கால்
வேறு வடிவமே மேற்கொளினும்—கூறின்

உனக்கும் ஒளியாள்; இதனை அவள்தாய்
தனக்கும் ஒளியாமற் சாற்று

### என்பேர்தான் மணிமேகலை

மாதவி பெற்ற மகளுக்கென் பேரையே
கோதவி கோவலன் வைத்திட்டாள்—ஈதுரைப்பாய்
மாதவிக்கு நாளும் மணிமே கலைமனத்தின்
தீதவிப்பாள் என்றதையும் செப்பு.

### சுதமதி மாதவிக்கு!

என்று மொழிந்தவள்தான் ஏகச் சுதமதியும்
சென்று தெரிவித்தாள் தேன்மொழிக்கே—கன்றைப்
பிரிந்தா வருந்தாதா? பெண்ணைப் பிரிந்தால்
வருந்தாதா பெற்ற மனம்?

### மணிபல்லவத்தில்

மணிபல் லவத்தில் மணலில் துயின்ற
மணிமே கலைகண் மலர்ந்தாள்—துணிவிழந்தாள்
பண்டறி யாதனவே பார்த்தாள் உறைவாரைக்
கண்டறி யாதகற் கண்டு

### முதியோள் விட்டுப்போனது அறமா?

ஆங்கிருந்தேன் என்னை அழைத்திங்கு வந்திடுமுன்
தூங்கினேன்! அந்நேரம் தூரத்தே—ஏங்கவிட்டுச்
செல்லல் அறமா? செயத்தக்க இன்னவெனச்
சொல்லல் அறமா தொடர்ந்து.

### கண் காணாத இடத்தில் கலங்குகின்றேன்

தேரு மிலாது தெருவு மிலாதுழையார்
யாரு மிலாதிருக்கும் இவ்விடத்தில்—சோருகின்ற
கண்ணீரும் நானும் கதறுங்கால் என் உறவீர்
எண்ணீரோ சற்றும் எனை?

### அம்மாவும் உதவவில்லை; அப்பாவையும் கண்டதில்லை

பழிகூறிக் கொன்ற ஒரு பாண்டியனை உண்மை
வழிகூறி யாளப் புரிந்த—எழிலான
அப்பாவை யுங்காணேன் அன்றும்கா ணேன் இன்று
அப்பாவை யுங்காணே னால்.

### மரமா தேறுதல் கூறும்? விலங்கா தேறுதல் கூறும்?

திமையாய் இங்குத் திரிகின்றேன் தெங்குபலா
ஊமையாய் இங்கிருக்கும்; ஒன்றுரையா—ஆமையும்
புள்ளிழுத்துக் கொள்ளும் புனற்கரைமா உண்டுதலை
உள்ளிழுத்துக் கொள்ளும் எனை ஓர்ந்து.

### கோலெடுத்துக் கொண்டு குறுக்கில் ஓடுகின்றது குரங்கு

தேனோடும் பூவிற் சிறையோடும்! புல்லுக்கு
மானோடும் கொக்கு மடையோடும்!—நானோடி
மேலெடுக்கும் வேலை எதென் றேன்குறுக்கே முள்வேலங்
கோலெடுக்கும் ஓடும் குரங்கு

### நண்டும் வண்டும் விளையாடும்! நானுமா விளையாடுவேன்!

நண்டு விளையாடும்; நன்மா நிழற்காரைக்
கண்டு மயிலாடும்; காவித்தேன்—மொண்டு
விளையாடும் வண்டு; விளையாட வாநான்!
களையா டினஎன் றன் கண்.

### முதியோள் வந்தாள்

திட்டில் அழுவாள் சிரிப்புக் கரைகாண
எட்டி முதியோள் எடுத்தணைத்துத்—கட்டிக்
கரும்பே உதைய னிட மிருந்து காத்தேன்
திரும்பநான் சொன்னபடி செய்.

### தவப்பெரியோர் அறம்உரையார் மிகச் சிறியை என்று

புத்தன் புகன்ற திருவறத்தை நீ அடைதல்
கத்தன் றென உணர்க கண்மணியே—புத்தம்
புதிய இளமேனி காணும் புலவர்
மூதிய மறைஉரையார் முன்.

### நினைத்த உருவம் கொள்ளும் புனைவினை

நினையும் உருவத்தை நீயடையத் தக்க
புனைவினை ஒன்று புகல்வேன்—தினையும்
மறந்தார்க்குத் தோதுபடல் இல்லை உனைப்போல்
துறந்தார்க்குத் தோதுபடும்.

### புனைவினை புகன்றாள் முதியோள்

பன்னாட்டார் ஆடவர் பாவையர் பூண்களும்
பன்னாளும் மாறிவரும் பாங்குகளும்—பன்மொழியும்
மூத்தார் இளையார் நடைப்பாங்கும் முற்றிலும்
மூத்தாள் மொழிந்தாள் அவட்கு.

### உறுப்புக்களை மாற்றும் முறை

நோக்குப் பலவும் நுதல்பலவும் வாய்பலவும்
மூக்குப் பலவும் முனைநடுவாம்—நாக்குப்
பலவும் பலரின் உருக்காட்டப் பின்னும்
பலவும் பகர்ந்தாள் அவட்கு.

### முதியோள் மறைந்தாள்

பலவாம் புனைவினை பாவைக்குச் சொல்லி
நிலவாம் முகத்தாளே நேரிங்—குலவியிரு
புத்தபீ டிகையுங்காண் கோமுகியும் காண்; போய்ஊர்
நத்துகஎன் றாள்மறைந்தாள் நன்று.

### தீவதிலகை காணப்பட்டாள்

காலை மணற்குன்றைக் கண்டு நடக்கையிலே
தீவ திலகை எனும் தேமொழியின்—நாவில்
அமுதெடுத்தால் அன்ன தமிழெடுத்தாள்! கண்ணின்
இமையின் இணைப்பெடுத்தாள் பெண்.

### தீவதிலகைக்கு மணிமேகலை

கப்பல் கவிழ்ந்ததனால் கண்ட மணி பல்லவத்தில்
தப்பல் நினைத்துத் தனித்தடைந்த—தொப்பது நின்
தோற்றம் நீ யாரென்னத் தோகை வரலாறு
மாற்றம் இலாதுரைத்தாள் மற்று.

### தீவதிலகையும் மணிமேகலையும்

முத்தன்ன வெண்ணகையார் முற்சென்றார் அங்கிருந்த
புத்தனார் பீடிகையில் போதுவிழி—வைத்தனர்
நாமுகிழ்த்தாள் நன்றதன்சீர் தீவ திலகைதான்!
கோமுகியும் காட்டினாள் கொம்பு.

### கோமுகிப் பொய்கையில் அமுத சுரபி

உண்ணாடிக் கண்டால்தன் உள்ளதுகாட்டும் தெண்ணீர்க்
கண்ணாடிப் பொய்கைக் கரைநோக்க—எண்முப்
பதக்கும் பிடிக்கும் பழங்கலம் ஒன்று
மிதக்கும் பிடிக்கும் அதை மின்.

### அமுதசுரபியுடன் திரும்புதல்

கமழ்வது தாமரை, காணிற் கலம் அஃ(து)
அமுத சுரபிஎன் றாள் அன்னம்—அமைய
இருகையில் ஏந்திய மங்கை திரும்பி
வருகையில் மற்றுங்கேட் டாள்!

### தீவதிலகை செப்பினாள்

நீபத்து நூறுமுறை நேரிற்கா ணுங்கலத்தை
ஆபுத்திரன் இட்டான் அந்நீரில்—நீ போய்
அறவணர்பால் கேட்பாய் அதன்வரலா றென்றாள்
திறவணத்தாள் தீவதில கை.

### அந்தக்கலந்தான் இந்தக் கலம்

இட்டுப் புகழ்பெற்ற ஏழைதான் ஏற்றசோ
றிட்டுக் கற்பிசைந் தீந்ததுவும்—இட்டே
எடுக்க எடுக் கக்குறையா தென்றதுவும் பொய்கை
அடுத்ததுவும் இக்கலமே ஆம்;

### பசியுள்ள இடத்தில் புசி என்று போ

அறியாமை வேரோ டழியாது? வாழ்வை
எறியாமைத் தீப்பசிதான் ஏகா—துறவேகேள்
ஒரூரி லாவிடினும் ஒரூரில் உண்டுபசி
நேரூர்ந்தும் அப்பிணியை நீக்கு.

### வையப் புகழ் உனக்கே

இளமையில் எய்துமோர் இன்பம் வெறுத்தாய்!
வளமையிற் போதல் மடக்கி—உளம்காத்தாய்!
வையப் புகழுனக்கே வாய்திறந்தால் கோடிவரும்
வெய்ய பசியை விலக்கு.

### ஆபுத்திரன் போல் அளி

வயிற்றுப் பசிநீக்கு வாழ்வறியார் தூக்குக்
கயிற்றை விழலாக்கு! கண்ணை—எயிற்றை மகிழ்
வேபுகுத்தாய் நீஉன்றன் வாழ்நா ளெலாமந்த
ஆபுத் திரன்போலம் மா.

### ஏழைக்கிடுவதே தவம்

வேலையில்லை தந்தைக்கு! வெள்ளை நூல் அன்னையிடம்
பாலில்லை பச்சைக் குழந்தைக்கே—தாலிவிற்றால்
வாங்குவா ரில்லை? அங்குவாட்டும் பசிநீக்கித்
தாங்குவார் தாம்தவம்செய் வார்.

## அறத்தின் சாறு

சோறில்லை என்பார்க்குச் சோறு தருவதுதான்
கூறறங்க ளின்சாற்றுக் கூட்டம்மா—வேறேதான்
எங்குண்டம் மாபசிக்கே ஈர்ம்பழஞ்சோ றிட்டுவக்கும்
அங்குண்டம் மாநல் லறம்

## இன்றியமையா நிலையில் இடும் சோற்றுக்குச் சாவு அல்லது வாழ்வு

கூன்மாடு விற்றுக் குதிரைவாங் கற்கென்றன்
கான்மாடு நின்றார்க்குக் காசளிக்க—நான்மாட்டேன்
இன்றி யமையா நிலையில் இடும்சோற்றுக்
கொன்றுசாக் காடொன்று வாழ்வு

## தீவதிலகை சென்றாள்

உயிர்வாழ்வேன் மக்கள் உறுபசி தீர்ப்பேன்
செயிர்தீரச் செப்பியது கேட்டேன்—வெயிற்கு
நிழல்அவ் வடிகள்பால் செல்வேன் நினைவு
தொழல்என்றாள் தோகைசென் றாள்,

## மாதவி மகளைக் கண்டாள்

மாதவி யாழ் துன்பச் சுதமதிதம் வாயினின்
றேதவியாழ் பெற்ற இடர்என்றே—தீதுறுவார்
சோறுபெற்ற தூய்கலத்தா ளைப்பெறறார் முப்பழத்தின்
சாறுபெற்றார் தாவி யணைத்து.

## அறவண அடிகளைப் பணிந்தார்கள்

ஆய அனைத்தையுமே அன்னையிடம் பாங்கியிடம்
ஏய உரைத்தாள் இளமங்கை—தூய
அறவணைத்தார் பக்கல் அணிகியே தாளில்
உறவணைத்தார் உச்சந் தலை.

## அறவணத்தார் அறிவித்தார்

அடிகள் உரைப்பார்; அப் புத்த நெறியைக்
குடிகள் தொடர்தல் குறைய—மிடிகள்
மலிய மறவலி ஆர்ந்தது மக்கள்
மெல்லியலா னார் அதன் மேல்.

### புத்தநெறி உலகில் பரவவேண்டும்

கொடிதுசேர் கோட்டையில் புத்த நெறிதான்
கடிதுசே ராதே எனினும்—நெடிது
முயலுவேன் நீயும் முயலுக நன்கு
பயிலுக என்றார் பரிந்து.

### ஆபுத்திரன் பற்றி அறவண அடிகள்

மன்பதைக்கு நேரும் பசிப்பிணி மாற்றுக!
பின்பதைக் கண்டு தருமமீ—தென்பதை
நீபெற் றிடலாம்! நிகழ்த்துகின் றேனினி
ஆபுத்தி ரன்சீரென் றார்.

### ஆபுத்திரன் புகழ் விண்ணினும் பெரிது

ஒழுக்கமெனு நல் லுறு துணைக் கேபே
ரிழுக்கம் புரிவார்க்கெதிர்ப்பு—முழக்கம்
புரிந்திட்ட ஆமகன் பெற்ற புகழ்தான்
விரிந்திட்ட விண்ணிற் பெரிது.

### கொலை வேள்வியை எதிர்த்தவன் ஆபுத்திரன்

வேள்வி எனஉரைத்து மாடாடு வெட்டலும்
கேள்வியே இன்றிக் கிளத்தலும்—நீள்வியான்
ஆமகன் பெற்ற புகழ்தன்னை அந்நாளில்
கோமகன் பெற்றானா கூறு.

### எத்தீமைக்கும் ஆபுத்திரன் இளைத்து விடவில்லை

அறத்தினைச் சார்ந்தே அடைத்த புகழை
அறத்தினுக் கேசெல வாக்கும்—திறத்தைக்
குறுகிய கொள்கையார் கொல்ல நினைத்தார்
இறுகிய நெஞ்சா இறும்?

### பிற்போக்காளரின் தலைவன் ஆபுத்திரனைக் கெடுக்க நரிவேலை செய்தான்

இருளில் உலகை நடத்துவார்க் கேந்தல்
அருளில் நடந்தானை அண்டி—மருளில்
நடந்த நரிவேலை செய்ததும் உண்டு
கடப்பானா கொண்ட கருத்து.

### ஆபுத்திரன் வரலாறெல்லாம் சொல்லி முடிக்கப்பட்டது

என்று சிறப்பிடங்கள் சுட்டி அறவணர்
நன்று முதலிருந் தீறுவரை—ஒன்றவே
ஆமகனின் அன்பு வரலாறெ லாம்சொல்லிப்
போமகளே என்றார் அப் போது.

### மணிமேகலை பிச்சைக்காரியானாள்

ஏன்று கலம்ஏந்தி மேகலைதான் அன்னவரை
மூன்று முறைசுற்றி முன்வணங்கி—மான்போல்
மருண்ட வழிநடந்தாள் மற்றவரை விட்டே!
தெருண்டு வழிநடக்கும் தேன்.

### எல்லோரும் மணிமேகலையைச் சூழ்ந்து கொண்டார்கள்

ஊர்ப்பிச்சைக் காரி உருவடைந்தாள் அவ்வுருவைச்
சேர்ப்பித்தாள் நல்ல தெருவழியே—வார்ப்படத்துத்
தங்கப் படிவம் தரையில் வரக்கண்டோர்
அங்கப் படியேசூழ்ந் தார்.

### எல்லோரும் வரவேற்கிறார்கள்

கண்ணம்மா உன்வரவு! கைநிறைய இட்டிடுவோம்
உண்ணம்மா என்றேஓ ராயிரம்பேர்—வண்ணம்
இருக்கும் படிவத்தார் சொன்னார்கள் சற்றே
இருக்கும் படிசொன்னாள் யாழ்.

### ஆதிரை வீட்டில் மணிமேகலை

கற்புப் புகழ்வாய்ந்தோள் உள்ளாளோ அன்னவளின்
இற்புக்கு முன் இடக்கேட் பாய் என்ற—சொற்பெருக்கிக்
காயசண்டி கைஎன்பாள் ஆதிரைஇல் காட்டினாள்
போயறங்கேட் டாள்சுடர்ப் பொன்.

### ஆதிரை வரவேற்பு

கையிற் கலத்தோடும் கண்ணில் அருளோடும்
பொய்யில் துறவென்னும் பூட்கையொடும்—துய்யமணி
மேகலையை ஆதிரை கண்டாள் மிகமகிழ்ந்தாள்
ஆகஅம் மாஎன்றாள் ஆய்ந்து

### ஆதிரை கறியோடு சோறிட்டாள்

தேவர் உலகம் சிறப்பென்னும் ஆரியர்சொல்
ஈவார் உலகம் இழிவாக்கப்—பாவை
கலமே நிறையக் கறியொடு சோறிட்டாள்
இலமே இலம்என்னு மாறு.

### ஆதிரை வாழ்த்து

அழகும் இளமையும் எண்ணாய் துறவே
பழகும் இளையாய் பசுநெய்—ஒழுகக்
கலத்திலிட் டேவிரு கையாலும் சோறு
நிலத்து நிலைக்கநின் சீர்.

### ஆதிரை இட்ட அமிழ்து

கண்டனர் ஊரார் கடிதுகேட் டார்பாரோர்
மண்டினோர் எல்லாரும் வாழ்த்தினார்—அண்டுமுயிர்
ஏதிரை என்னாமைக் கிங்கு முதன்மையாம்
ஆதிரை இட்ட அமிழ்து.

### மணிமேகலை எல்லார்க்கும் இட்டாள்

இலம் நிறைந்தார்க்கெல்லாம் மனம்நிறைந்த தென்னக்
கலம் நிறைந்து போனது கண்டு—நலம்நிறைத்தாள்
வாரீர் உண் பீர்என்பாள் வந்துண்பார், பின்னும்இலார்
வாரீர்என் பாள் உண்பார் வந்து.

### காயசண்டிகை சொன்னாள்

காயசண்டி கைஎன்பாள் மாதகியின் கண்ணாள்முன்
நீயறத்தின் செல்வியென்று நேர்வந்து—தாயேநான்
யானைத்தீ என்னும் பசியுடையேன் வற்றாஉன்
தேனத்தீ னேன்என்றாள் தேர்ந்து.

### யானைத் தீ என்பதென்ன?

வயிறுநிறைந் தாலும் மனநிறையார்க் குள்ள
இயல்பின்பேர் யானைத்தீ என்பர்—துயரறுக
சாப்பிடுநீ சாப்பிடு நீ சாப்பிட்டு நன்னிலையைக்
கூப்பிடுநீ என்ன குறை?

### சொல்லால் பாதி தொல்லை போயிற்று

என்றுரைத்தாள் மேகலைதான் ஈபவளே சொன்னதனால்
நின்றபிணி யிற்பாதி நீங்கிற்றாம்—நன்றுண்டாள்
மேலுண்டாள் மற்றுண்டாள் மேன்மேலுண் டாள் நாட்கள்
நாலுண்டாள் நல்னிலையுண் டாள்.

### காயசண்டிகை நோயகன்றது

ஆறென்றால் ஆறாத யானைத் தீ ஆறியது!
சோறென்றால் முப்போதே துய்க்கின்றேன்—கூறென்றால்
பட்ட தொல்லை பஞ்சு படாதம்மா! பெற்று விட்டேன்
விட்டதொல்லை யாலே மிடல்.

### காயசண்டிகை கணவனை நொந்தாள்

என்னை உடையான் எனக்குநோய் என்றவுடன்
தன்னை உடையானைத் தான்பிரிந்தான்—பின்னுமவன்
காவிரிப்பூம் பட்டினத்தில் காத்திருந்தால் சான்றோர்கள்
நாவிரிப்பார் நன்றாம்என் றான்.

### என் கணவர் ஒரு மரம்

சிற்றுளியும் தன்மை சிதைந்தால் சிதைவகற்றிப்
பொற்றுளிபோல் போற்றத் தவறிடார்—நற்றொழிலோர்!
தீராநோய் எங்கேனும் தீர்த்துவா என்றானை
ஆராயின் அன்னோன் மரம்.

### தமிழ்நாட்டின் அருமை பெருமை

நோயென்றால் ஓடுவதும் நோயின்றேல் ஒட்டுவதும்
நாயென்றால் பின்னோடும் நாய்ச்செயலே—தீயெம்யாம்
அன்புற் றிருந்தறம் செய்தோமே? ஈன்றாளா
இன்பத் தமிழ்த்தாய் எமை?

### அறம் எது!

அறஞ்சென்று கெட்டாரு மில்லை அறத்தின்
புறஞ்சென்று வாழ்ந்தாரு மில்லை—பறந்த
கிளிவாய்ப் பழம்நழுகிக் கீழ்ப்பசித்தோன் வாயில்
துளிவீழல் தூயற மன்று.

### நல்லறம்

அறிந்து பசித்தோர்க் கருளல் அறமாம்
முறிந்த மனத்தாலே மூன்று—முறுஞ்சோறு
போடல் அறமன்றே என்று புரிந்தாய்
வாடல்இங் கேன்என்றாள் மாது.

### உலக அறவி பற்றிக் காய சண்டிகை

உலக அறவி புகுந்தே உலகின்
கலகப் பசிநோய் களைந்து—நிலவுகவே
என்றுசெல் லும்காயசண் டிகையை இன்னமுதே
நன்றுசெல்க என் றாள் நகை.

### மணிமேகலை உலக அறவி அடைந்தாள்[1]

ஈந்து மகிழ்வாள் எழிற்றா மரைமுகத்தேன்
ஏந்துவாள் போற்கலத்தை இன்னமுதோ—டேந்திய
வண்ணம் உலக அறவி மருளினாள்
தண்ணம் தமிழ்க்குயில் தான்

### உலக அறவி புக்காள் மணிமேகலை

ஒளிந்து நடந்த ஒருபயிலை ஊரார்
தெளிந்து செறிந்து ரைவுப்—குளிர்ந்தநிலா
இன்னம் உணவுண்ண வாரீரோ என்றபடி
தன்னந் தனிநுழைந்தாள் உள்.

### மறைமலை அடிகளின் சொற்பெருக்கா?

அறவி அகத்தும் புறத்தும் இளைய
துறவி முகம்பார்த்துச் சூழ்ந்தார்—நிறைகலி
ஆர்கலியோ அண்ணல் மறைமலை சொல் கேட்டாரால்
நேர்கலியோ என்னும் நிலம்.

### சித்திராபதி வீட்டில்

பேர்த்தி துறவும் பெருநிலையம் சென்றதுவும்
நேர்த்தி எனவிரல் நேர் உதட்டில்—சேர்த்தியே
மாதென்ன மாதோ வழிதப்பக் கேட்டஎன்
காதென்ன காதோஎன் றாள்,

### உதயகுமரனிடம் ஓடினாள் சித்திராபதி

எனச்சித்தி ராபதிதான் ஏதேதோ கூறி
மனச்சிற்றில் வேக மடிகண்—சினத்தால்
எரிய இளவரசன் எங்கென்று கூந்தல்
சரியச்சென் றாள்வீட்டை விட்டு.

### ஆள் போய் உதயனிடம் சொன்னான்

இல்லில்லை என்று பளிக்கறையில் ஓர் ஆள்போய்ப்
பல்லில்லை என்று படுகிழவி—பொல்லா
உதட்டால் உமைப்பார்க்க வேண்டுமென் கின்றாள்
அதட்டவா என்றான் அவன்.

## சித்திராபதியைக் கூட்டிவா என்றான் உதயன்

கண்டசித்தி ராபதியைக் கையோடு நீ கூட்டிக்
கொண்டுவா என்றுதையன் கூறவே—பண்டைக்
கிழமே! கிளிக்காட்டில் கெட்ட சுளைமாம்
பழமேபோ பார் என்றான் ஆள்.

## மந்தியுடன் மன்னன் மகன்

குந்தியிருந்த குமரனெதிர்க் கூன்முதுகு
மத்தி இருந்துதன் வாய்திறந்தாள்—சிந்தும்
கொழகொழத்த ஓசையெல்லாம் கொண்டுபொருள் கொள்வான்
இழவே என்றேஇளங் கோ.

## என் மகள் பகை ஐயா

கோவலன் செத்ததனைத் கொண்டுமகள் மாதவிதான்
நோவத் தவத்துறையை நோக்கினாள்—யாவர்
தகையாரை யா? நங்கை யல்லா லெனக்குப்
பகையாரை யா நூற்படி.

## பொது மகளிர் வழக்கம்

முற்புணர்ந்தான் செத்தால்பெண் முற்றும் துறப்பதெனும்
கற்புணர்ந்தால் கைச்செலவு கட்டுமா?—இற்புகுந்து
தொட்டாலே பொன் கேட்போம் தொட்டிருந்தால் சொத்தடைவோம்
விட்டாலோ வேறாள் என் போம்.

## யாழ் பொது

பாணன் இறந்துவிட்டால் யாழோ பலர்க்காகும்!
காணுமலர் உண்ணும் கருவண்டு—நாணமேன்?
பொன்றருமாண் பாலோர் புணரத் தகுந்தவரே
இன்றைக்கா யாமிப் படி.

## இன்பத்திற்கு வாழ்வா? துன்பத்துக்கா?

வளவரை சேர் மந்தி பலாவை விடா நாட்
டிளவரசே! என்றன் இளையாள்—உளவரைக்கும்
இன்ப முழுவதுவும் எய்தலாம்; எய்தாமல்
துன்பமுழு தும்தோய் வதா?

### மணிமேகலையைக் கொள்ளாமல் விடுதல் இழிவு

என்னழகை என்றன் மகளழகை மற்றழகைத்
நன்னழகாக் கொண்ட தனியரசைப்—பின்னரசே
கொள்ளல் புகழைக் கொடுக்கும்; புனிதத்தைத்
தள்ளல் இகழைத் தரும்.

### மணிமேகலையைக் கொள்வது பண்பாடு

முகத்தை நிலவால் முடித்து விரலின்
நகத்தைக் கிளிமூக்கால் நாட்டி—முடித்த
அழகு முடிப்பை எடுத்து முடித்தல்
பழகுமுடி வேந்தர்பண் பாடு.

### அவள் மெய் இன்ப ஊற்று

மைவேண்டாம்; கண்ணல்ல நெய்தல் மலர்கள்
நெய்ஏன்; குழலன்று நீளருவி—பொய்யன்று
பூண்வேண்டாம்; மேனியன்று; பொன்னின் ஒளிப் பிழம்பே
ஊண்ஏன்? மெய் அன்றின்ப ஊற்று.

### தாமரைப் பொய்கை

பணிமே வரசுக்குப் பட்டத்தரசி
மணிமே கலையல்லால் மற்றார்—தணியாத
ஆசை அனலுக்குத் தாமரைப் பொய்கை அன்றோ
மீசையுளார் சொல்க விரைந்து.

### மேகலை கிடைத்தால் எல்லாம் கிடைக்கும்

பல்லெல்லாம் வெண்முத்துப் பந்தர்! கிளிநாணும்
சொல்லெல்லாம் முத்தமிழ்ச் சோலையே—வெல்லரிய
தென்றுவரின் கொத்துச் சிரிக்குமிதழ் மேகலைதான்
ஒன்றுவரின் எல்லாம் உனக்கு.

### என் விண்ணப்பம் காண்!

கட்டழகா காண்பாய்என் விண்ணப்பம்! உன்னடியில்
இட்டழவே இங்குற்றேன் என்னெனில்—ஒட்டாரக்
காரிதனைக் கைக்கொள்க காற்றாய் பறக்குமுன்
தேரிதனைச் செய்க விரைந்து.

### அவள் உலக அறிவியில் உள்ளாள்

உலக அறவியினில் உள்ளாள்என் மூச்சு
விலக அறவிடேல் என்னை—இலகணையின்
மென்பஞ் சுமக்கமையும் வேளைஇது! மற்றிதுவே
இன்பம் சுமக்கும் இனிது.

### உதயன் தேரேறி விரைவாய்ச் சென்றான்

ஏற்பாரை நோக்கிக் கிழவி இடலானாள்
மேற்பாரை நீங்கமலை விட்டெழுந்தீப்—போற்பாரோர்
தங்கோமான் பிள்ளைபோய்த் தட்டிய தேர்ப்பரிகள்
தங்கோமான் என்பன; தாம்.

### மணிமேகலையை உதயன் மறித்தான்

உலக அறவி உலவு நிலவை
விலக விடாது மறித்து—நிலமீது
செப்புக் குடம்படல் தெண்ணீர்க்கும் ஆம்காம
வெப்புக் குடம்படல் வேண்டு.

### இன்பம் துறப்பது கட்டாயமா?

ஏனித் துறவு மணிமே கலைஎன் தீர்
மானி த்துறவு மறந்தாய்—நாஙீ
இறப்பதுகட் டாயம் இடைநடுவில் இன்பம்
துறப்பது கட்டாயமா சொல்?

### மணிமேகலை கூறுவாள்

என்றுதையன் சொல்ல எதிர் வணங்கி ஐயாவே
ஒன்றுதையல் சொல்வேன் உளங்கொள்க—என்றும்
இடும்பை மலையென எள்ளென நேரும்
இடும்பைஇவ் யாக்கை அன்றோ?

### மும்மைத் தமிழ் காண்க

பொன்னெனப் பூவெனப் போரென நேரென
என்னென சொல்லினும் இன்னலின்—முன்வலைஎன்
றான்றோர் அணுகார் அவற்றால் துயரெய்தார்
சான்றோர்க; மும்மைத் தமிழ்.

### வள்ளுவன் சொல் ஓர்க

'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்' என்றே—ஓதினார்

வள்ளுவர்; அன்னாரின் வாய்மை யதனையோ
எள்ளுவர் எய்தார் நலம்.

### மணிமேகலை உருமாறினாள்

ஈதுபுகன் ற மணிமே கலைஇனியும்
தீது செயக்கூடும் என்றுட்போய்—மாதான
காயகண்டி கைபோலக் காணுருமாற் றித்தெருவிற்
போயகன்றாள் கைக்கலமும் பூண்டு.

### உதயன் ஏமாற்றம்

இன்னுமவள் உள்ளே இருக்கின்றாள் என்றிருந்தான்
பின்னும் அவளைப் பெறாதகலேன்—என்றங்கே
நின்றிருந்தான் நெஞ்சை நிலைகேட்டான் வீடுபோய்
நன்றிருந்தான் நாட்டான் மகன்.

### மணிமேகலை தொண்டு

நிலையத்தில் நல்லுணவு வந்துவந்து நீட்ட
மலையத் தனையளவு மண்ட—அலைபோல்
வறியார்கள் வந்து வயிறார்ந்திட் டார்தேக்
கெறிவார்கள் எண்ணற் றவர்.

### அவள் பறித்த அறம்

இடுகை மகிழ்ந்திடுவாள் ஏழைகள் தன்பால்
கடுகையில் தன்கை கடுக—மடமடென
அள்ளி இடுவாள்நல் லின்பம் அதிற்பறிப்பாள்
கள்ளி மணிமே கலை.

### என் மாற்றுருவம் பயன்பட்டது என்பாள்

தான் கொண்ட காய சண்டிகையின் நல்லுருவம்
தான்கொண் டிருப்பதே நன்றென்பாள்—ஏன்றவர்கள்
தேன்கண்டு நெய்பால் தயிர்கொண்டு வந்தாலும்
தான்கண்டு வாங்குவாள் தாழ்ந்து.

### ஏந்துகை காணாத நேரம் கண் துயிலும்நேரம்

ஈந்தன எல்லாம் இனப்படுத்திச் சோறுகழி
வாய்ந்தன ஆக்கி வறிபோறின்—ஏந்துகை
காணாத நேரமதன் கண்துயிலும் நேரமென்றாள்
வானாள்வா ணாக்குகின்ற மான்.

### ஊருக்குத் தாய்

தெருவில் கடையில் சிறுமுடக்கில் வீட்டின்
அருகில் முதியோர் அழிந்தார்—திரியுறுப்பர்
வாயூட்டி நெஞ்சம் மகிழ்வாள் தமையீன்ற
தாயூட்டி னாற்போலும் சார்ந்து.

### சிறைப்பட்டோரும் திருத்தப்பட்டார்

வேந்து சிறைக்கூடம் மேகலைதான் சென்றங்கே
ஈந்த முதலீகைக் கெட்ட நாள்—தேர்ந்த
கொலை கண்டார் தாமும் குறைகண் டுணர்ந்த
நிலைகண் டாள் நெஞ்சுவந்தாள்.

### எல்லோரும் திருந்தினார்கள்

சோறும் மிகக்கொடுத்துச் சொற்பொழிவும் தானடத்தி
ஊறு பிறர்க்கொருவர் உன்னாத—வாறு
முறை கண்டாள் மூன்று தமிழ்கண்டாள், நாட்டில்
சிறைகண்டார் தீங்குகண்டார் யார்?

### நாட்டு நிலையறிதல்

நாட்டு நிலையறிந்து தொண்டு நலமறிந்து
காட்டுக் குயிலைக் கடிதழைத்துச்—சூட்டும்
முடியரசும் ஆட்சி முறைஎவ்வா றென்றான்
குடியரசும் சொன்னாள் குறை.

### அரசன் மேகலை நேர்பாடு

முறையிருக்கும் போது சிறைஎதற்கு வேந்தே?
குறையிருக்க ஆட்சிசெயல் குற்றம்—இறைகேட் க;
மாணவரின் வாய்க்குத் தமிழும், மனத்துக்கச்
சாணி அறிவும் உயிர்.

### கட்டாயக் கல்வி தேவை

கல்லார் கடைப்பட்டார் ஆதலினால் கல்விதான்
எல்லார்க்கும் கட்டாயம் வேண்டுமால்—இல்லார்க்கோ
ஊணுடை நல்ல உறையுள் படிப்பளித்தல்
மாணுடை மன்னர் கடன்.

### தமிழின் இன்றியமையாமை

ஆசைக் களவில்லை ஆதலினால் மாந்தர்கள்
காசைப் பெருக்கக் கருதுவர்—ஆசைதான்
உந்தா தடக்குதற்கும் உள்ளுணர்வு சேர்வதற்கும்
செந்தமிழைச் சேர்க்க இறை.

### வேந்தன் வேலை தொடங்கினான்

மேகலை இவ்வாறு விளம்பச் சிறையினை
மாகலைக் கூடமா மாற்றுதற்குப்—போக என
நல்லமைச்சர்க் காணை நவின்றான் நவின்ற அச்
சொல்லமைச்சுத் தொட்டார் வினை.

### மணிமேகலை போக விடை பெற்றாள்

எல்லார்க்கும் கல்விதான் கட்டாயம் என்றபடி
இல்லார்க்குக் கல்வியும் ஏற்றவை—எல்லாமும்
ஆம்படி ஆக்குவேன் என்றாள் விடைகேட்டாள்
போம்படி சொன்னான் புகழ்ந்து.

### உதய குமாரன் மனக் கண்முன்

தார்வேந்தன் மைந்தன் தனியிருந்து மேகலைதன்
நேர்வாய்ந்தாற் போலும் நினைவாக—வார்வாய்ந்த
கொங்கையார் கோமாட்டி கொள்கலத்தோ டங்ககன்ற
மங்கையார் என்றான் மதித்து.

### வானிலவு எங்கே?

உலக அறவியின் உட்சென்றாய்! ஓர்பெண்
விலகி வெளியில் நடந்தாள்—நிலையத்துள்
மீனெலாம் கண்டேன் மிகுநேரம் என்னருமை
வானிலா எங்கே வழுத்து.

### நான் புகார் நாடன்

யானைத்தீ நோயாளி போல எழில்மாற்றிப்
பானைத்தேன் நீவெளியிற் பாய்ந்தாயே—மானுக்கு
வேடனா உள்ளத்து மன்னியோய் வேண்டுபுகார்
நாடனான் நன்கு மதி.

### சித்திராபதி வரக்கண்டான்

பெண்நேரில் உள்ளாள்போற் பேசும் உதையனின்
கண்நேரில் கூனிவரக் கண்டுவிட்டான்—புண்நடுவில்
வேலொன்று பெற்றதுபோல் வெட்கினான் வந்தகிழத்
தோலொன்று சொல்லலா னாள்.

### வேங்கை வெள்ளாட்டுக்குத் தள்ளாடுமா?

வெள்ளாடு கண்ட ஒருவேங்கை இரைதவறித்
தள்ளாடும் இஃது தனிவியப்பே—எள்ளாடும்
செக்கும் எருதிழுக்கும் தேன்சிட்டும் நின்வலைக்குச்
சிக்கும்என் றாள்உடைந்த சீப்பு.

### களிறு கன்னல் ஒடிப்பதும் அரிதா?

நாளைக்கே ஏதிலான் நாடு பிடித்தாளும்
காளைக்கே வஞ்சியின் காம்பான—தோளைப்
பிடித்தல் அரிதா பெருங்கயிறு கன்னல்
ஒடித்தல் அரிதா உரை.

### சித்திராபதி எண்ணம் என்ன?

என்று முடுக்கினாள் அன்னாள் இளவரசை
ஒன்று கொடுத்தொன்றை வாங்கியே—தின்று
கொழுக்கலாம் என்னுமொரு கொள்கையாள் கூனி
முழுக்கலாம் மூட்டினாள் ஆங்கு.

### மணிமேகலையிடம் ஓடினான் உதயன்

மாலையுற்றான் மாலையிற்றான் மேகலைமேல் மாலை
வைத்தே
ஆலையுற்றான் அக்கரும்பின் சாறுபற்றல்—ஏலுமென்றே
காயாண்டி கையுருவின் கண்ணகியின் பெண்ணையுற்றுத்
தீயசண்டை கைவிடென்றான் சேய்.

### என்னை அல்லால் உனக்கு யார்?

மைகாரி சண்டிகையாய் மாறி உலவுகின்ற
கைகாரி மேல்நடக்கும் காரியம்என்—மொய்காரின்
கூந்தலாய் வாஎன்று கூறினோன் யார்இந்த
ஏந்தலை அல்லால் இனிது.

### தன் தகுதியை மேலும் கூறுகிறான் உதயன்

என்னிலும் மேலோன் இருக்கின்றான் போலும்நான்
உன்னிலும் மேலாம் ஒருத்தியையும்—உன்னுகிலேன்
அன்றில் உனையழைத்த அன்றில்யான்! யாவர்சொல்
மன்றில் உனையழைத்தார் மற்று.

### இளமை நிலையாமையை எடுத்துக் காட்டினாள் மணிமேகலை

அங்கு விழுந்தெழுந் தாடிநிற்கும் ஓர்கிழத்தைத்
திங்கள் எழுந்த திருமுகத்தாள்—இங்கேகாண்
எங்கே அழகிளமை? எத்தனைநாள் முத்துப்பல்
தொங்கும் துரிஞ்சில் முலை.

### காப்பது தவமே

பற்றினோர் துன்பமே பற்றினோர்! நற்றுறவு
பற்றினோர் துன்பமே பற்றாதார்—எற்றுக்கோ
காமம் எதற்குமனக் கோட்டம் இவ்வுலகில்
ஏமம் எவர்க்கும் தவம்.

### காஞ்சனன் ஐயப்பாடு

வாஞ்சநன் மாற்றமெலாம் மங்கைசொலும் போதங்குக்
காஞ்சனன் வந்துகண்டான் கண்ணேரில்—தீஞ்சொல்லாள்
காயசண்டிகைதான் கசந்தாளோ என்னை என்றான்
ஆயஅண்டிணான் அவளை அங்கு.

### என் காயசண்டிகையே

என்காய சண்டிகையே இன்னல்சேர் உன்நோயும்!
நன்காய தோஎன்றான்! நங்கைதான்—வன்காயை
மெல்ல நினையாள்போல் வேந்தன் மகனிடத்தே
சொல்ல நினைந்நாள் தொடர்ந்து.

### மனத்தூய்மையே தவம்

மனந்தன் நிலையினில் மன்னல் பொருளாம்
மனம்பெண் பொன் மண்மேற் செலுமேல்—துனியாம்
உவந்தலை யாது மனம்பயில் விப்பவர்
தவந்தலைப் பட்டவர் தாம்.

### தவம் துயர் மாற்றும் மருந்து

தனக்கென வாழாமை தான் பிறர்க் காதல்
சினம்பகை என்றும்எண் ணாமை—அனைத்தும்
வருந்துயர் நீக்கிடும் ஆயின்நற்ற வந்தான்
இருந்துயர் எற்றும் மருந்து.

### அருளின் தழைவே தவம்

தவமோ அருளின் தழைவாம்; அருளோ
எவர்மாட்டும் ஏதில் இரக்கம்—உவப்பப்
பிறர்க்குழைத் தின்புற் றிருப்பதும் நன்றே
இறப்பதும் இவ்விரண்டும் வீடு.

### காஞ்சனன் ஐயப்பாடு

இதுகண்ட காஞ்சனன் என்சொல் விரும்பாள்:
எதுகண் டவன்பால் இருந்தாள்?—அதுகாண்பேன்
என்றே ஒளிந்திருந்தான் இன்னல் மனத்துடன்
ஒன்றி அறிவியி னுள்,

### உதயகுமரனின் ஐயப்பாடு

தன்மனத்துள் மன்னன் மகனுமே சாற்றுவான்
என்மனத்தை வேறொன்றில் ஏகவைத்தாள்—அன்னவன்பால்
அன்புடையாள் போலும்! அறிவேன் எனச்சொல்லி
வன்புடையான் சென்றான் மறைந்து

### உதயன் பின்னே காஞ்சனன் சென்றான்

உலக அறவியில் உள்ள அறையில்
உலவி யிருந்த ஒருத்தி—நிலையினை
உற்றறிய வந்த உதையனைக் காஞ்சனன்
முற்றறியச் சென்றான் முனைந்து.

### உதயனைக் காஞ்சனன் வெட்டி வீழ்த்தினான்

எட்டியடி உள்ளறையில் இட்ட இளங்கோவை
வெட்டியடி வீழ்த்தினான்! காஞ்சனன்—கட்டிக்
கரும்பே எனநெருங்கக் கண்ட இளமான்
விரும்பேல் விளம்புதல் கேள்.

### காயசண்டிகை அல்லள்; இவள் மணிமேகலை

மணிமே கலையேநான் மாற்றுருவம் பூண்டேன்
அணிமேவு காயசண்டி கைபோல்!—துணிய
எனைப்பார் எனைத்தன் இயல்உருவம் காட்டி
அனுப்பினாள் காஞ்சனனை அங்கு.

### இறந்த உதயனுக்கு அழுதாள் மணிமேகலை

தன்னுடைபூண் டாள்காய சண்டிகைத்தோற்றம்தணந்தாள்
பொன்னுடை வேந்தன் புதல்வனைப்போய்—என்அசையா
நெஞ்சம அசைத்தென் நினைவாற்செத் தாய்என்று
கொஞ்சி அழுதாள் குயில்.

### அறம் பயிலும் நான் இறந்தானுக்கு அழுவதா?

அறந்தான் தவம்பயில் பள்ளிஅஃ தல்லால்
இறந்தானை எண்ணுதல் என்னாய்?—மறந்தும்
அழுந்தேன் துயரினில் என்றாளுக் காம்என்
றெழுந்தான் கிழக்கினில் என்று.

### அமுதசுரபியைக் கண்டு பிச்சையிட்டவர்கள் பின்பு அஃது இருக்கும் இடம்வந்து பிச்சையிடலானார்கள்

அமுத சுரபி அடையாளம் கண்டே
அமுதளித் தோர்பின் அதுதான்—அமைவிடம்
சென்றீய லாயினார் சென்றீயல் தம்கடன்
என்றீய லாயினார் பின்.

### ஈதல் என்றால் அமுதசுரபிக்கு ஈதல்தான்

ஈதல் அமுத சுரபிக்கே ஈதல்என்
றோதலும் ஆனார் உலகத்தார்—ஈதல்
அமுத சுரபியே ஆகி ஈவானும்
அமுத சுரபிஆ னான்.

### ஐயம் ஏற்கும் மணிமேகலை அறமே செய்கின்றாள்

ஓம்புகார் என்னப் பசித்தோர்க் குதவுமோர்
பூம்புகார்க் கேநற் புகழெல்லாம்—ஆம்படி
செய்யு மணிமே கலையின் செயலெல்லாம்
ஐய மெனினும் அறம்.

### அறவி முனிவர் அறிந்தார்கள்

அறமா மணிபால் உதையன் அடைவும்
மறமேவு காஞ்சனன் வாளால்—எறிந்ததுவும்
ஓர்ந்தார் உலக அறவி முனிவரெலாம்
போந்தார் புரைதீர்ந் தாள் முன்.

### நடந்தது கேட்ட முனிவர்கள் தம் வருகையை அரசனுக்குச் சொல்லி அனுப்பினார்கள்

அறைந்திருக்க உற்றவற்றை அன்னவர்பால் மங்கை!
மறைந்திருக்க! மாய்ந்தோன் உடலும்...மறைத்து வைக்க?
என்றார் முனிவரெலாம் ஏந்தலைக் காணுதற்குச்
சென்றார் வரவுரைத்தார் தேர்ந்து.

### வாயில் காப்போன் முனிவர் வரவை மன்னனுக்கு உரைத்தான்

அன்னது கேட்டநல் வாயிலோன் அங்கோடி
இன்னது செய்தியாம் என்னலும்—முன்னர்
வரவிடு கென்றுமா வண்கிள்ளி சொன்னான்
வரவினர் வேந்தன்முற் சென்று.

### முனிவர் முடிந்தது கூறினார்கள்

வாழ்கமா வண்கிள்ளி நாளுமே செங்கோல்தான்
சூழ்கமா வண்புகழ்! தூயோய்நின்—வாழ்வில்
இதுவரை எய்தாத இன்னல்எய் திற்றால்
அதுவரை அன்று; பெரிது!

### காமத்தால் செத்தவர்களின் கதைகள் பல

ககந்தன் மகன்தான் மருதிஎனும் கன்னல்
உகந்தன் னான் தந்தையால் ஊறுற்—றிகழ்வுற்றான்
முந்தை விசாகையினை மூத்தசேய் முன்னியதால்
தந்தையால் தானிறந் தான்.

### அன்று பல நடந்தன என்ற முனிவரை இன்றும் உளதோ என்றான் மன்னன்

காமக்கள் உண்டவர் கற்பழித்துச் செத்ததனை
யாமிதற்கு முன்னுங்கேட் டோமன்றோ—கோமானே
என்று முனிவர் இயம்ப அரசனவன்
இன்று முளதோஎன் றான்.

### மாதவி துறந்தாள் மகளும் துறந்தாள்

கோவலனார் குற்றமிலார்; ஆயினும் கோள்கேட்ட
காவலனார் கொல்லென்று காய்ந்தார்என்—றோவத்து
மாதவியும் நற்றலத்தில் மன்னினாள்; பெண்மணியும்
மாதவியே ஆனாள் மனம்.

### மணிமேகலையிடம் உதயகுமரன் தன் கையிருப்பைக் காட்டினான்

காயசண்டி கைஎன்று கண்டார் நினைக்க அவள்
ஆயஉரு மாற்றி அம்பலத்தில்—தூயளாய்
ஏற்றலும் ஈதலும் செய்திருந்தாள் மன்னன்மகன்
ஆற்றலும் காட்டினான் ஆங்கு.

### காஞ்சனன் உதயனைக் கொன்றான்

நள்ளிரவிற் நங்கையினை நண்ணும் இளங்கோவை
எள்ளியே காயசண்டி கைகணவன்—துள்ளியே
வாளாள் எறிந்தான் வழுவின்றி அங்குளோம்
ஆளால் அறிந்தோம்என் றார்.

### மாண்டானா மைந்தன்!

மாண்டனா மைந்தவனவன் மற்றென்பின் மாநிலத்தை
ஆண்டனா அஃதும் இலையேஎன்—றீண்டிய
கண்ணீர் உகுத்துக் கதறினான் ஆங்கும்ஓர்
எண்ணத்துள் ஆழ்ந்தான் இறை.

### காஞ்சனன் தூயவன்

இப்படியோர் போற்றும் அறத்தின் இளையாளை
அப்படியா செய்திறந்தான் அன்புமகன்—எப்படிநாம்
கண்டாலும் காஞ்சனன் நெஞ்சாலும் கைவாளின்
தொண்டாலும் தூயனே ஆம்!

### உரிய தண்டனையை உதயன் பெற்றான்

வழிவந்த கன்றைத்தேர் வாட்டியதால் மன்னன்
வழிவந்த சேயை மடித்தான்—வழிவந்த
யான்பெற்ற மைந்தனவன் காமத்தால் காஞ்சனனால்
தான்பெற்ற தண்டம் தகும்.

### மணிமேகலையைச் சிறையில் இடுக
### மகனுடலுக்கு இறுதிக் கடன் நடக்க

துறவோர் அருளிய தொல்லறநூற் சீர்த்தி
இறவாது காத்தல் எனது—மறவாக்
கடன்! மேகலைசிறை காண்கவே மைந்தன்
உடன்மேவ உற்ற கடன்.

### அம்மா உன்னையும் சிறையிட வந்தோம்

மன்னனை வாழ்த்தியே மாமுனிவர் சென்றனர்
அன்னம் நிகர்த்தானை அங்கிருந்தோர்—தன்னம்
தனிக்கண்டு சாற்றுவார், அன்னாய் சிறைக்கே
உனைக்கொண்டு போவதும் உண்டு.

### சிறையில் உனக்கென்ன குறைச்சல்?

இறையும் உனக்கீந்த இன்னல் மிகுந்த
சிறையும் திருக்கோயி லாகும்—நிறையும்
படியாரை அச்சிறையில் பார்ப்பின்எம் அம்மைக்
கடியார் அலால்மற்றி யார்?

### ஊண் இட்ட உண்மை மறப்பாரோ?

மாணீட்ட மாதர்க் கரசேஇவ் வையத்தார்க்
கூணிட்ட உன்னை மறந்தவர்கள்—காணின்
இறந்தவர்கள் என்க அருள்சேர்ந்த நின்தாள்
பிறந்தார் பெறத்தக்க பேறு.

### அரசுக்கு எதிர்ப்பு

என்றார் மணிமே கலையைச் சிறைக்கழைத்துச்
சென்றார் இதையறிந்தோர் சீறியே — ஒன்றாய்
விடுவீரெம் தாயையே காவலரே நின்றால்
படுவீரென் றார்கள் பரிந்து.

### மணிமேகலை மக்களுக்கு அறங் கூறினாள்

ஏவலரென் றெண்ணீரோ என்னைச் சிறைப்படுத்தல்
காவலரின் கட்டளையாம் காணீரோ—தீவழியே
நண்ணலும் ஏற்குமோ மக்காள் நலிவுசெய
எண்ணமும் ஏற்காதென் றாள்.

### மணிமேகலை சிறையில் சேர்க்கப்பட்டாள்

ஊர்ச்சா வடியைச் சிறையாக்கி ஒன்றாவே
நீர்ச்சாலும் கூழ்க்கலமும் நேர்வைத்துக்—கூர்ச்சுடர் வேல்
வைத்தாரை வைத்துமணி மேகலையை உள்ளடைத்து
வைத்தார்கை யோடுகொண்டு வந்து.

### சிறையிலும் மக்கள் சீற்றம்

காவிரிப்பூம் பட்டினத்துக் கண்ணகியின் பெண்ணாளை
நீவிரித்துன் பப்படுத்தல் நேர்த்திஎன்று—தாவிச்
சிறைகாப்போர் வேலும் சிதைத்தும்மை வைத்த
முறைகாப்போர் எங்கென்றார் மொய்த்து.

### சீறினோருக்கு மணிமேகலையின் ஆறுதல்

வம்பிட்ட மக்களின் முன்வந்து மாதரசி
கும்பிட்டுக் குற்றம் இதுவென்றாள்—வெம்புற்றே
அம்மாநின் றாவதென்ன அம்மன்னன் தீயனென்றே
சும்மாநின் றார்மெய் துடித்து.

### மணிமேகலைக்குச் சாப்பாடு வந்தது

நின்றிருந்தார் மக்கள் நினைவு பலிக்கவில்லை
என்றிருந்தார் மாதின் எதிர்வணங்கிச்—சென்றிருந்தார்
ஈப்பாடு தாரோனின் ஏற்பட்டாற் சிற்சிலர்
சாப்பாடுதாம் கொணர்ந்தார் தாய்க்கு.

### சிறைப் பணியாளர் கூற்று

கேழ்வரகின் கூழ்கொடுக்கச் சொன்னார்; கெடுவார்கள்!
வாழ்வரசுக் கீய மனம்வருமா— தாழ்விலராய்
வாழையிலும் யாம்உனக்கு முப்பழம் பாற்சோரும்
வாழையிலை போட்டிட்டோம் வந்து

### இனி வேண்டாம் கூழே போதும்

என்று சிறைப்பணி யாளர் இயம்பினார்
ஒன்று மணிமே கலையுரைப்பாள்—இன்று
கொடுத்தீர்! இனிஎனக்குக் கூழ்போதும் என்றாள்
வடுத்தீர்ந்த மங்கைநல்லாள்.

### தெருவார் தருவார்

பாலடிசில் நெய்யடிசில் பத்துக் கறியோடும்
காலையிலும் மாலையிலும் கன்னிக்கே—சாலத்
தெருவார் தருவார் சிறையாளர் கொண்டு
தருவார் திருவார் தமிழ்க்கு.

### சிறைப் பணியாளரைச் சீர்த்தி கேட்டாள்

இறைவிநற் சீர்த்திதான் ஏவலரைக் கூவிச்
சிறையினில் மேகலையின் செய்தி—அறைகென்னக்
கேழ்வரகை ஒன்றிரண் டாக்கிக் கிளரிய
கூழ்தருவோம் கொள்வாள்என் றார்.

### சிறையில் மணிமேகலையைப் பார்த்தாள் சீர்த்தி

ஒருநாள் சிறைகாணல் உற்றனள் சீர்த்தி
திருநாள் திருக்கச்சிக் கோயில்—இருநாளும்
உண்டாலும் தீரா உளுத்தவடை உண்டாள்கற்
கண்டு மணிமே கலை.

### சீர்த்தி மன்னனிடம் ஓடினாள்

நிறைந்திருந்த நெஞ்சின் மணிமே கலையை
மறைந்திருந்து கண்டஅம் மன்னி—பறந்தோடி
மங்கட்டும் என்னேல் மணாளா அவள்என்பால்
தங்கட்டும் என்றாள் தனித்து.

## உன்சார்பில் மணிமேகலை இருக்கட்டும்

சிக்கிச் சிறைவலையில் தீங்குபடும் அப்பசுங்கி
ளிக்கிச் சிறைநீக்கம் தக்கதே—புக்கில்
இருந்தால் இருக்கட்டும் என்றாள்தன் காதல்
மருந்தால் பிழைக்கின்ற மன்.

## கொடியவளுக்குக் கூழும் கொடாதீர்

அரண்மனையில் ஓர்பால் அடைந்தால் அறையில்
திரண்முகில் கூந்தல் திருவைப்—புரண்டழவே
கூழும்கொடா தீர் கொடியவட்கென் றாள்தன் கீழ்
வாழும் பலர்க்கரசி மற்று.

## ஒன்றும் மணிமேகலைக்குக் கொடோம் என்றவர்கள் எல்லாம் கொடுத்து வந்தார்கள்

ஒன்றும் கொடோமென் றொரு தட்டில் பண்ணியங்கள்
அன்றும் கொடுத்தார் அதன்பின்னும்—எறுறம்
குளநீரும் சோறும் குறையாது தந்தார்
இளநீரும் வேளைக் கிரண்டு.

## 'மணிமேகலை செத்து விட்டாளா?' என்று சீர்த்தி கேட்டாள்!

இட்டினியும் காக்க இருப்பாரை மன்னிதான்
பட்டினியாற் செத்தாளா பாவை? என்று—கிட்டி
வினாவினாள் உள்ளாள்என் றோதலும் சிங்கக்
கனாவினாள் உள் அஞ்சி னாள்.

## பணிப்பெண்களின் மேல் ஐயப்பட்ட சீர்த்தி தன்மனமொத்த பாங்கிமாரிடம் சொன்னாள்

மனமொத்த தன்பாங்கி மாரை அவள் சாவை
இனமொத்துக் காப்பீர்கள் என்றாள் புனலற்ற
நாவுக்குத் தேன்வார்க்கும் நல்லமணி மேகலையின்
சாவுக்குத் தாளா துலகு.

## பாங்கிமார் மடியிற் கட்டிவந்து கொடுப்பார்கள்

நொடியும் மறவாமல் நூறு கறிகள்
மடியும் தெரியாமல் மாதர்—அடிசிலொடு
கொல்லையால் வந்து கொடுப்பார் அரசியிடம்
இல்லையே என்பார் இனிது.

### சாவாள் என்று எண்ணினேன்! அவள் மணலிற் பிடுங்கிய வள்ளிக் கிழங்கு

உணற்கிழந்து சாவாள் என் றெண்ணினேன் ஓங்கும்
மணற்கிழங்கு போலும் அவள் வாழ்ந்தாள்—தணற் பிழம்பில்
பொற்பைக்காண் பேன்எனில் வையம் பெறாதிவள்
கற்பைக்காண் பேன் என்றாள் காய்ந்து.

### பூக்காரி மகனை அழைத்து மணிமேகலையின் கற்பைக் கெடுத்துவிடு என்றாள் சீர்த்தி! அவன் பட்டாடை கேட்டான்

பூக்காரி பெற்றஒரு பொன்னனைக் கற்பழிக்கும்
தீக்காரி யத்தில்நீ செல்லென் றாள்—நாக்குநீர்ச்
சொட்டோடு தூயசீர் மன்னியே வேண்டுமே
பட்டாடை என்றான் பணிந்து.

### கடுக்கன் வேண்டும் என்றாள்

காதுக்கும் கல்லிழைத்த நல்ல சடுக்சன் இப்
போதுக்குத் தந்திட்டாற் போதும் என்றான்—மாது
மணிமே கலையின் மனம்பறிக்கச் சீர்த்தி
அணி என் றளித்தாள் அவை.

### பொன்னன் உடுத்துக் கொண்டு எழுந்தான்; விழுந்தான்

காலுக்குத் தோற்செருப்புக் கையில் விரித்தகுடை
மேலுக்குக் காண விளக்கொருகை—ஏல
எழுந்தான் இரவிலே வேட்டி தடுக்க
விழுந்தான் விலைபோகா மாடு.

### மணிமேகலை இல்லை, பிச்சைக்காரனைப் பார்த்தான் பொன்னன்

ஆசைவைத்தேன் உன்மேலென் றேநுழைந்த அப்பொன்னன்
மீசைவைத்த ஓராளை உட்கண்டான்—ஓசையின்றிச்
சீர்த்தியிடம் ஓடிவந்தான் செய்தி தெரிவித்தான்
பார்த்தது பொய்; பார்போய்என் றாள்.

### ஆண் பிள்ளை தான் என்று பொன்னன் ஓடி வந்தான்

காட்டுக்குப் பாய்கின்ற கால்வாய் நிகர்பொன்னன்
வீட்டுக்குள் ஓடி விடலைகண்டே—ஓட்டம்
பிடித்தான் பிடித்தால் பிடிகாணாப் பையன்!
கடித்தாள் அரசிதன் கை.

## அரசிக்குப் பெண்ணாகப் பொன்னனுக்குப் ஆணாகத் தோற்றமளித்தாள் மணிமேகலை

தான்கண்டாள் தையலையே அவ்வறைக்குள்! பொன்னனவன்
தான்கண்டான் ஆடவனைக்! கண்டிருவர்—மேனடந்தார்
கண்டுமலைத் தேன் என்றான் காட்டுப்பூக் காரிமகன்
கண்டுமலைத் தேன் என்றாள் காம்பு.

## எனக்கு அமிழ்து மணிமேகலையே!

உண்ணாமல் வாழ்கின்றாள்! உற்றொருவன் கற்பழியப்
பண்ணாமல் மாற்றுருவம் பற்றுகின்றாள்—தண்ணார்
தமிழன்றோ சாருநெறி தன்னலமே எண்ணாள்
அமிழ்தன்றோ அன்னாள் எனக்கு.

## என் மகனை மணிமேகலை கொல்லவில்லை!

என் மகனைக் கொன்றாள் இவளென்றால் அம்முனிவர்
நன்மகளைக் கொண்டாட நாணுவரே—தன்மகனாய்த்
தன்மகளாய்த் தந்தையாய் இவ்வுலகைக் காணுகின்ற
பொன்மகளே என்றன் புகல்.

## மணிமேகலையைக் கொல்லுவது அறமா?

பண்டு துறந்தோர் குறைபாடு பட்டவரைக்
கண்டு நிறைபாடு காண்பார்போல்—தொண்டுதவம்
என்பாளை வீழ்த்தல் இளநீர்க்காய் ஈன்தென்னை
மென்பாளை வீழ்த்தல்என் றாள்.

## சீர்த்தி வாய்மை கண்டாள்!

அறமா மணிமே கலையை அழித்தல்
அறமா அதுமா நிலமாள்—திறமா
என அறி வைந்திலும் எய்தினாள் ஆறாம்
மன அறிவில் வாய்மை கண்டாள்.

## பூவை விலக்கி மணிமேகலையின் பொன்னடியைப் பூணேனா?

சாவை விலக்கித் தமிழ்த்தொண்டு செய்யேனா
பூவை விலக்கியவன் பொன்னடியை—தேவைஎனப்
பூணேனா என்தலையில் பூவாய் பொழியும் அறம்
காணேனா பற்றுக் கடந்து.

### மணிமேகலை எதிரில் சீர்த்தி

கலையுணர்ந்த மேலோரும் காணற் கரிய
நிலையுணர்ந்த சீர்த்தி நிறைபால்—முலையாவின்
கன்றேபோல் சென்று மணிமே கலையின்முன்
நின்றே அழுதாள் நெடிது.

### சீர்த்தியின் விண்ணப்பம்

ஒறுத்தோம் சிறையினில் உய்த்தோம் இடவும்
மறுத்தோம் இடரெலாம் வைத்தோம்—பொறுத்தருள்க
தீயைச் சிறுவீடு சேரினும் தீவைத்த
சேயைத் தழுவும் தாய் கை.

### நான்தான் தவறு செய்தேன் என்றாள் மேகலை

முந்தா தடங்கி மொழிந்திட்ட சீர்த்திக்குச்
செந்தா மரைவாய் திறந்தாள்முன்—வந்தது
தான்செய் தவறு பொறுத்ததாம் நல்லோய்நீ
தான்செய்த தென்ன தவறு.

### மகன் செத்தது உனக்குத் துன்பம்! என்னைச் சிறையில் வைத்தது எனக்கு மகிழ்ச்சி

உன்னழகைப் பாரில் உரித்துக்கொண் டேபிறந்த
பின்னழகும் முன்னழகும் பெற்றமகன்—என்னழகால்
செத்தது துன்பம் உனக்குச்! சிறையில்எனை
வைத்தது மாமகிழ்ச்சி எற்கு.

### அரசனிடம் அரசி

இலவை இதழ்என்னும் மன்னி மறுவில்
நிலவைச் சிறைவைத்தல் நேர்மை—அலவென்று
காவலன்பால் சொன்னாள் கடிது கருங்குயிலின்
கூவலன்பால் ஒப்பினான் கோன்.

### மணிமேகலையை விடுதலை செய்தார்கள்

அணங்கின் அடிமலர் மன்னவன் மன்னி
வணங்கி அரண்மனை வாயில்—பிணங்கி
இருந்த தமிழருக் கீந்தார் சிறையில்
இருந்த தமிழை எடுத்து.

## சிறைமீண்ட செல்விக்கு வரவேற்பு

நீர்க்கும் உணவுக்கும் கையேந்தி நிற்கின் றார்
யார்க்கும் தமிழ்வேண்டும் என்றேற்றார்—வேர்க்கே
அறிவொன்று வேண்டும் அதற்குத் தமிழின்
நெறிஒன்று வேண்டுமென் றார்.

## தமிழில்லார் அறிவில்லார்!

அருந்தமிழ் இல்லார் அறிவில்லார் அன்னவர்க்குக்
குந்தக் குடிசை குடிக்கக்கூழ்—கந்தை
அடைய விடாரே அறிவின் இடையார்
அடைவிப்பார் முற்றுணர்ந் தார்.

## தமிழிலக்கியம் கண்டவர்க்கே உணர்வு வரும்

கடையர் அறிவிலார் இடையர் சிறிதே
உடையர்; தலையார் உணர்ந்தார்—தடையின்றி
வெள்ளத் தமிழின் இலக்கியம் வேண்டினோர்க்
குள்ளத் துணர்வு வரும்.

## இல்லாரை எள்ளுவர்

(இன்னிசை வெண்பா)

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்ற நேயத்து
வள்ளுவர் வாய்மையை உள்ளுக உள்ளாரை
எள்ளுவர் இல்லாதார் என்று.

## மணிமேகலை உலக அறவிக்குச் சென்றிருந்தாள்

என்று கலத்தோடும் ஏற்ற உணவோடும்
நன்று மணிமே கலைநடந்து—சென்றிருந்தாள்
தாம்புகார் ஆயின் தழைவிலைஎன் றன்றோர்வாழ்
பூம்புகார் மன்றம் புனைந்து.

## மேகலை காஞ்சி சென்றாள்

அறவணரும் அன்னம் சுதமதியும் காஞ்சி
உறஇருக்கும் செய்தி உணர்ந்த—அறமா
மணிமே கலைதான் மணிக்கல மென்னும்
அணிமேவச் சென்றிட்டாள் அங்கு,

### மன்னனிடம் விண்ணப்பம்

அரசனும் மற்றும் அலுவலர் தாமும்
வரிசையின் வந்து வணங்கித்—திருவார்
அறவணரே அம்மையே காஞ்சியின் அல்லல்
அறவருள வேண்டுமென்றார் ஆங்கு.

### மற்றும் வேண்டுகோள்

மழையில்லை கஞ்சி வளமில்லை எம்மேற்
பிழையில்லை எங்கும் பெரிதும்—தழைந்துள்ள
பஞ்சம் அகற்ற அருட்பஞ்சமா என்றுரைத்தான்
நெஞ்சு துடித்தரசன் நின்று.

### அறவணர் ஆறுதல்

மன்னர் நிறைகொற்றம் வாழ்கவே காஞ்சிதான்
நன்னர் நலமடைதல் திண்ணமே—என்னும்
நிலைக்கும் நினைப்புடையோம் மாது மணிமே
கலைக்கும் நினைப்புண்டு காண்.

### மேலும் அறவணர்

சாற்று கவிகை அரசர்மனந் தாழ்வெல்லாம்
மாற்றும் மணிமே கலைஎன்று—போற்றும்
அடிகள் உரைத்தார்! அவளும் உரைத்தாள்
மிடிகள் விலகிடும் என்று,

### மேலும் மணிமேகலை சொன்னாள்

மேலும் விளம்புவாள்; வேந்தேநீ வாழ்கநின்
கோலும் கிடப்பக் கொடியோர்க்கு—மேலும்
கிடப்பக் கிடைநெல் ஒருபாற் குவிந்து
கிடப்பதேன் என்றாள் கிளி.

### மற்றும் மணிமேகலை

உள்ளார் இசைவேண்டி இல்லார்க் குதவுவர்
உள்ளார் கடனென் றிலார்க்குதவ—உள்ளுக!
உள்ளார் உடைமைஎனல் இல்லார் இழந்ததே
பள்ளநீர் பாய்ந்த நீராம்.

## மேலும் மணிமேகலை

இனமென எண்ணி இடுக! இடாரேல்
மனமெனும் மங்கை தனது—தனிமை
பொறாது மறுபுலம் போதலும் உண்டு
உறாதார்க் குதவலும் உண்டு.

## மணிமேகலை காஞ்சியிலே அடிவைத்ததால் பஞ்சம் பறந்தது!

அடிவைத்தாள் மேகலை ஆங்குற்றார் யாரும்
மிடிவைத்தார் தம்மை மிசைவித்—திடவே
கலத்திற் கலத்தைக் கவிழ்த்துக் கலச்சோ
நிலத்திற் கிலஞ்செய்தார் இட்டு.

## காஞ்சிக்குத் தேரும் திருவிழாவும்

கல்லார்க்குக் கல்வி அருளும் புலவரைப்போல்
இல்லார்க்குச் சோறுகறி இட்டாள்மேல்—செல்விக்கே
ஆரும் புகழ்வைத் தளித்ததே காஞ்சிக்குத்
தேரும் திருவிழா வும்.

## மணிமேகலையே சோறுகறியாக்கத் தொடங்கிவிட்டாள்!

ஈயப் பெரும்பானை இட்டுச்சோ றாக்குவோர்
ஓயப் பொருள்கள் உதவுவார்—தூயமணி
மேகலையும் சோறாக்கி வெஞ்சனம்செய் வாள்பிஞ்சுப்
பாகலையும் சென்று பறித்து.

## தனக்கு வரும் புகழையும் மற்றவர்க்குப் பயன்படுத்தும் செய்கை அரியது!

உள்ளவர் தத்தமக் குள்ளது போகமற்
றுள்ளதை இல்லார்க் குதவுகின்ற—உள்ளம்
அரிதன்று; பெற்றபுகழ் மற்றவர்க் காக்கல்
அரிதென் றறவணர் சொன்னார்.

## மழை பெய்தது காஞ்சியில்

அழையாது வந்தளம் அம்மைகால் வைக்கப்
பிழையாத யாமும் பிழைத்தோம்—மழையா
மழையும் மழைத்தது வாழ்கின்றோம் என்றார்
தழையாத காஞ்சியார் தாம்.

### வஞ்சி மன்னன் வணங்கி வழியனுப்பினான்

அறவணர் ஆய்ந்த சுதமதி யோடும்
உறவண மேகலை ஓவம்—புறவணம்
கால்வைத்தாள் அக்கால் தலைவைத்தான் நன்றி என்றான்
கோல்வைத்த காஞ்சியின் கோ.

### மணிமேகலை போகக்கண்ட மங்கைமார் வாழ்த்தினார்கள்

முன்னாலே சோறின்றி முட்டுண்டோம் அம்மையே
உன்னாலே உள்ளோம் என்றேவாழ்த்திப்—பொன்னாலே
பூணிட்ட செவ்வுலக்கைப் பாட்டுப் புதுக்கினார்
நாணிட்டு நங்கையினைக் கண்டு.

### உழவர் வாழ்த்தினார்கள்

பல்வாளை மேயும் பழனத்தைத் தாண்டியே
செல்வாளை எங்கள் சிறுமையினைக்—கொல்வாளை
நினையாமை வாழ்வோமா என்றார்கள் நீரார்
சினையாமைச் செய்யுழவர் சேர்ந்து.

### தையலார் சாப்பிட்டுப்போகக் கெஞ்சினார்கள்

மின்னுக்கும் நல்லறத்து வேளுக்கும் முன்நடக்கும்
பொன்னுக்குப் பூவெடுத்தார் போலெடுத்த—முன்கைகள்
கூப்பிட்டு வாழ்த்திய கோதைமார் கெஞ்சினார்
சாப்பிட்டுப் போம்படியே தாழ்ந்து.

### மற்றும் பலர் வாழ்த்தினார்கள்

கல்லாமை நீக்கிக் கடும்பசிக்கு நீர்ச் சோறும்
இல்லாமை நீக்கினீர் என்றுரைத்துப்—பல்லோர்தம்
போரடித்த நெல்லைஎலாம் பொன்னாக்கிப் போகவரத்
தேரடித்துக் கொண்டிருந்தார் சென்று.

### மற்றும் மக்கள் வாழ்த்து

கண்பொங்கக் கையெடுத்தால் காலெடுக்கும் செல்வரிடம்
வெண்பொங்கல் வாங்கி விலாப்புடைக்க—உண்கென்றாய்
உள்ளளவும் ஊருக் குழைத்தவளே வாழ்கென்றார்
எள்ளளவும் யாம்மறவோம் என்று.

## மற்றும் பலர்

என்றும் அறியா எமையீன்ற தாய்போலும்
ஒன்றும் எதிர்பாரா தூர்க்குழைத்தாய்—இன்றே
எமைவிட் டகன்றாலும் எம்முள்நீ உள்ள
சுமைவிட் டகலாதென் றார்.

□ □ □